கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# பகவத் தரிசனம்





ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை அக்டோபர் 2011 ₹ 15/-




## கோவிந்தனின் இல்லம்


ஸ்ரீல பிரபுபாதரின் நினைவு நாள்,
அக்டோபர் 30, ஞாயிறு
தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

மலர் 1, இதழ் 3


அக்டோபர் 2011



3 பக்தி யோகம் ஒரு விஞ்ஞானம், வெறும் உணர்ச்சி அல்ல

—ஸ்ரீல பிரபுபாதர்

பக்தி என்பது வெறும் உணர்ச்சிபூர்வமானது என்று நினைப்பவர்களுக்கு ஸ்ரீல பிரபுபாதர் அருளிய விளக்கம்



8 கோவிந்தனின் இல்லம்

—பத்மநாப கோஸ்வாமி

விருந்தாவனத்திலுள்ள பிரம்மாண்டமான கோவிந்தஜி கோவிலைப் பற்றிய தகவல்கள்

12 போலி சாமியார்களும் உண்மை சாதுக்களும்

—ஜெய கிருஷ்ண தாஸ்


போலி சாமியார்களை கண்டுகொள்ள உதவும் ஒரு வழிகாட்டி




18 கடின உழைப்பிலிருந்து விடுதலை பெறுதல்

—ஸ்ரீல பிரபுபாதர்

ஸ்ரீல பிரபுபாதருடன் டெல்லாஸ் நகரில் நடைபெற்ற ஓர் உரையாடல்





27 இலங்கையில் கிருஷ்ண பக்தி

—வாசுதேவ தத்த தாஸ்

இலங்கை வாழ் மக்களிடையே கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பிரச்சாரப் பணிகள்



23 பகவத் கீதை உண்மையுருவில்

—ஸ்ரீ கிரிதாரி தாஸ்

பத்தாம் அத்தியாயத்தின் ஒரு கண்ணோட்டம்

7 ஏகாதசி பிரசாதம்

15 அண்ணன் தீனபந்து

21 ஸ்ரீமத் பாகவதம்

20 ஐரோப்பாவின் இஸ்லாமிய நாட்டில் நகர சங்கீர்த்தனம்

30 சிப்பிவாடா கோவில், தற்போது இஸ்கானிற்குச் சொந்தம்

## பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *பகவத் தரிசனம்*.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ் (C.செந்தில் குமார்)

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், இராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், சுகோபி தேவி தாஸி, மதுமதி பிரியா தேவி தாஸி, ராஜ சேகர், ஜெய கிருஷ்ண தாஸ்

**பதிப்பாசிரியர்:** யுதிஷ்டிர தாஸ் (உஜ்வல் ஜாஜோ)

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ், வேங்கடேஷ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**பதிப்பகத்தார் அலுவலகம்:** பேக் டு காட்ஹெட், 33, ஜானகி குடிர், ஜுஹு சர்ச் எதிரில், ஜுஹு, மும்பை - 400049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** சாரதி பிரிண்டர்ஸ், 6/63, LIG, தொண்டைமான் தெரு, NH-1, மறைமலைநகர், தமிழ்நாடு - 603209.

**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே. (பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் அறங்காவலர்: ஜெயாத்வைத ஸ்வாமி)

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

# தாமோதர மாத திருவிழா

முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரின் ஆச்சரியத்தக்க லீலைகளில் ஒன்று, அவர் தனது அன்னை யசோதையால் உரலில் கட்டிப்போடப்பட்டது. அனைத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தும், அவர், தனது அன்னையின் அன்பின் கட்டுப்பாட்டில் வந்த அந்த சிறப்பு லீலையினை கிருஷ்ண பக்தர்கள், கார்த்திக் என்று அறியப்படும் சமஸ்கிருத மாதம் முழுவதும் கொண்டாடுகின்றனர். அன்னை யசோதையால் உரலில் கட்டப்பட்ட கிருஷ்ணருக்கு தாமோதரர் என்று பொருள். *தாம* என்றால் "கயிறு" என்றும், *உதர* என்றால் "வயிறு" என்றும் பொருள்படும்.



கார்த்திக் மாதத்தின் மாலை நேரத்தில் தினமும் தாமோதரருக்கு நெய் விளக்கேற்றி, தாமோதராஷ்டகம் எனப்படும் பாடலைப் பாடி இத்திருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்வருடம் அக்டோபர் பதினொன்றாம் தேதி முதல் நவம்பர் ஒன்பதாம் தேதி வரை ஒவ்வொரு இஸ்கான் கோவிலிலும் கொண்டாடப்படும் இத்திருவிழாவில் பங்குகொள்ள உங்கள் அனைவரையும் இதன் மூலம் அழைக்கின்றோம். மேலும் விபரங்களை அறிய தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் கோவிலைத் தொடர்பு கொள்ளவும்.

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

சந்தா முடிவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

# பக்தி யோகம்—ஒரு விஞ்ஞானம், வெறும் உணர்ச்சி அல்ல

*அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய* **தர்மம், தெய்வீக நிலைக்கான வழி** *என்னும் புத்தகத்தின் பதினைந்தாம் அத்தியாயம்*

ஏவம் ப்ரஸன்ன-மனஸோ
பகவத்-பக்தி-யோகத:
பகவத்-தத்த்வ-விக்ஞானம்
முக்த-ஸங்கஸ்ய ஜாயதே

பகவானின் பக்தித் தொண்டுடன் ஏற்பட்ட தொடர்பினால் யாருடைய மனம் தெளிவடைந்ததோ, அவர் சுத்த ஸத்வ குணத்தில் (கலப்படமற்ற நற்குணத்தில்) நிலைபெற்று, எல்லா பௌதிகத் தொடர்பிலிருந்தும் முக்தி பெற்று, பரம புருஷ பகவானைப் பற்றிய உண்மையான விஞ்ஞானப்பூர்வமான அறிவைப் பெறுகிறார். (ஸ்ரீமத் பாகவதம் 1.2.20)

முழுமுதற் கடவுளைப் பற்றிய விஞ்ஞானம் ஆன்மீகப் பாதையில் மேற்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உரியதாகும். முட்டாள்களும் குறைமதி படைத்தவர்களும் முழுமுதற் கடவுளைப் புரிந்துகொள்வதில்லை; அவர்கள் கிருஷ்ணரைப் பற்றி மனம்போன போக்கில் விளக்கமளிக்கின்றனர். உண்மை எது என்றால், பௌதிக குணங்களின் களங்கங்களிலிருந்து விடுபட்டாலன்றி, ஒருவன் பிராமணனின் நிலையை எட்டினாலும்கூட முழுமுதற் கடவுளைப் பற்றிய விஞ்ஞானத்தைப் புரிந்துகொள்ள முடியாது. தகுதி பெற்ற பிராமணன் உண்மையான வைஷ்ணவனாக மாறும்போது, அத்தகு ஆனந்தமயமான முக்திபெற்றநிலையில், புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் என்றால் என்ன என்பதை உண்மையில் புரிந்துகொள்ள முடியும்.



## கடவுளைக் கற்பனை செய்ய முடியாது

பக்தி யோகத்தின் வழிமுறை மனக் கற்பனையல்ல, இஃது ஒரு விஞ்ஞானம். தற்போதைய ஸ்லோகத்தில், *பகவத்-தத்த்வ-விக்ஞானம்,* "ஒருவன் முழுமுதற் கடவுளைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான அறிவைப் பெறுகின்றான்," என்று கூறப்பட்டுள்ளது. கணிதத்தின்படி, இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு வரும்—இஃது என்றும் உண்மையே. உங்களுடைய கற்பனைக்கு ஏற்றவாறு, அதனை ஐந்தாக மாற்ற முடியாது. அது சாத்தியமல்ல; ஏனெனில், கணிதம் என்பது ஒரு விஞ்ஞானம். நீங்கள் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து என எங்கு இருந்தாலும், இரண்டும் இரண்டும் நான்கு என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வதைக் கவனிக்கலாம். அதைப் போலவே, கடவுளையும் மனதிற்கு ஏற்றவாறு கற்பனை செய்ய முடியாது. இன்றைய கால கட்டத்தில், "நீங்கள் உங்களது கடவுளையும் நான் எனது கடவுளையும் கற்பனை செய்யலாம்," என்று பலர் கூறுகின்றனர். கடவுளைப் பற்றி கற்பனை செய்யலாம் என்ற எண்ணத்திற்கு இடமே இல்லை. கடவுளைப் பற்றிய விஞ்ஞான உண்மையை பௌதிகத் தொடர்பிலிருந்து விடுபட்ட (முக்த-ஸங்க) நபரால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்று இங்கு கூறப்பட்டுள்ளது. அவர்,

இயற்கையின் கீழ் குணங்களுக்கு அப்பாற்பட்டு விளங்குவதால் மகிழ்ச்சியுடனும் ஞானத்துடனும் (*ப்ரஸன்ன-மனஸ:*) விளங்குவார். தமோ (அறியாமை), ரஜோ (தீவிர) குணங்களின் கட்டுப்பாட்டில் நீங்கள் இருக்கும்வரை, மகிழ்ச்சி அல்லது ஞானம் என்ற கேள்விக்கே இடமில்லை. எனவே, நீங்கள் சுத்த ஸத்வத்தின் (தூய்மையான ஸத்வ குணத்தின்) தளத்திற்கு வர வேண்டும்.

## கடின உழைப்பு அவசியமில்லை

இதற்கு முந்தைய ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது யாதெனில், *சேத ஏதைர் அனாவித்தம் ஸ்திதம் ஸத்வே ப்ரஸீததி.* அதாவது, "ஒருவனின் இதயம், ரஜோ, தமோ குணங்களிலிருந்து விடுபட்டு ஸத்வ குணத்தில் (நற்குணத்தில்) நிலைபெறும்போது, அவன் ஆனந்தத்தை அடைகிறான்." அந்நிலையில் இருப்பவன், பௌதிக இலாபங்களுக்காக பூனைகளைப் போன்றும் நாய்களைப் போன்றும் உழைக்கக்கூடிய மக்களின் செயல் எவ்வளவு முட்டாள்தனமானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மனித வாழ்க்கை கடவுளைப் புரிந்துகொள்வதற்காகவே (*அதாதோ ப்ரஹ்ம-ஜிக்ஞாஸா*). முட்டாள் மிருகங்களால் கடவுளைப் புரிந்துகொள்ள முடியாது, ஆனால் மனிதர்களின் உணர்வு விருத்தியடைந்திருப்பதன் காரணத்தால், அவர்களால் கடவுளைப் புரிந்துகொள்ள முடியும்.

இருப்பினும், இந்த வளர்ந்த உணர்வின் பலனை அனுபவிப்பதற்கு, நீங்கள் ஸத்வ குணத்தின் தளத்திற்கு உயர்வு பெற வேண்டியது அவசியம். அப்போது, பௌதிகத் தேவைகளைப் பெறுவதற்காக கடினமாக உழைக்கத் தேவையில்லை என்பதை நீங்கள் இயற்கையை ஆராய்வதன் மூலமாகக் காண முடியும். பறவைகளும் மிருகங்களும் தங்களது உணவைப் பெறுகின்றன, துணையைப் பெறுகின்றன, அவற்றின் சுய வழியில் பாதுகாப்பைப் பெறுகின்றன, மேலும், உறங்குவதற்கு ஓர் இருப்பிடத்தையும் பெறுகின்றன. எறும்புகளுக்குக்கூட அவற்றின் தேவைகள் கொடுக்கப்படுகின்றன. நாம் ஒரு தோட்டத்தில் அமரும்போது, எறும்புக்கும் குடும்பம், வீடு, உணவு என அனைத்தும் உள்ளது என்பதை நம்மால் காண முடியும். எறும்பிலிருந்து யானை வரை அனைவரும் தத்தமது வாழ்வின் அவசியத் தேவைகளைப் பெறுகின்றனர். இவற்றைக் கொடுப்பது யார்?

## அமெரிக்காவின் போலி நாகரிகம்

"இறைவன் 84,00,000 வகையான உயிரினங்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில், நாகரிகமானவர்கள் என்று கூறிக் கொள்ளும் மனித சமுதாயத்தினர் தங்களது தேவைகளுக்காக மிகவும் கடினமாக உழைப்பது ஏன்?" என்ற கேள்வியை ஸத்வ குணத்தில் இருப்பவர் கேட்கக் கூடும். நாம் மிருகங்களைக் காட்டிலும் அதிக அறிவுடையவர்கள் என்பதால், நம்முடைய வாழ்க்கைப் போராட்டம் இதர உயிரினங்களின் போராட்டத்தைவிட குறைவாகவே இருக்க வேண்டும். ஆனால் (தற்போதைய நாகரிகத்தில்) அப்போராட்டம் அதிகமாகவே உள்ளது. இஃது எத்தகைய நாகரிகம்? இது நாகரிகமே அல்ல. ஒவ்வொருவரும் அமைதியான சாந்தமான வாழ்வை விரும்புகிறார்கள். ஆனால் அதற்கு மாறாக, உண்ணுதல், உறங்குதல், பாலுறவு கொள்ளுதல், தற்காத்தல் ஆகிய நான்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, நவீன மனித சமுதாயம் இரவு பகலாக கழுதையைப் போல் உழைக்கும்படி ஒவ்வொருவரையும் கட்டாயப்படுத்துகின்றது. அத்தகு கடின உழைப்பிற்குப் பிறகும்கூட, அடிப்படைத் தேவைகள் கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. நான் அமெரிக்கா செல்வதற்கு முன் இந்தியாவில் வாழ்ந்து வந்தபோது, அமெரிக்கா செல்வச் செழிப்புள்ளதாக இருப்பதால், உண்ணுதல், உறங்குதல் போன்றவற்றில் மக்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது என்று நினைத்தேன். ஆனால் அங்கு சென்ற பின்னர், நான் கண்டது யாதெனில், அங்குள்ள மக்களில் ஒரு பிரிவினர், தெருவிலோ பூங்காவிலோ உறங்குகின்றனர், அவர்களுக்குச் சரியான உடைகள் இல்லை, போதுமான உணவு இல்லை, நிலையான குடும்ப வாழ்க்கையும் இல்லை—அமெரிக்கர்கள் இத்தகைய நாகரிகத்தை உண்டாக்கியுள்ளனர். இதுபோன்ற போலி நாகரிகத்தில் மக்கள் எப்போதும் கவலையுடனும் சஞ்சலத்துடனும் வாழ்கின்றனர். அவர்களால் எவ்வாறு கடவுளைப் புரிந்துகொள்ள முடியும்?

## உண்மையான யோகம்


கடவுளைப் புரிந்துகொள்வதற்கு நீங்கள் முதலில் அமைதியான மனநிலைக்கு வர வேண்டும். அதன் பின்னர், கடவுளைப் புரிந்துகொள்ளும் போது, *ப்ரஸன்ன மனஸா,* நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஒருவர் பக்தி யோகத்தைப் பயிற்சி செய்வதால் மட்டுமே மகிழ்ச்சியடைய முடியும், இதர பயிற்சிகளால் அல்ல. கர்ம யோகம், ஞான யோகம், தியான யோகம்,

**நாம் மிருகங்களைக் காட்டிலும் அதிக அறிவுடையவர்கள் என்பதால், நம்முடைய வாழ்க்கைப் போராட்டம் இதர உயிரினங்களின் போராட்டத்தைவிட குறைவாகவே இருக்க வேண்டும். ஆனால் (தற்போதைய நாகரிகத்தில்) அப்போராட்டம் அதிகமாகவே உள்ளது. இஃது எத்தகைய நாகரிகம்?**

ஹட யோகம் என்று பல்வேறு யோக முறைகள் உள்ளன. ஆன்மீக ஞானத்தை அடைவதற்குச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும் ஒரு வித யோகமே. ஆனால் உண்மையான யோகா என்பது பகவத்-பக்தி யோகமே, அதாவது முழுமுதற் கடவுளுக்கு பக்தித் தொண்டு செய்வதே. எனவே, பகவத் கீதையில் (6.47) கிருஷ்ணர் பின்வருமாறு கூறுகிறார்:

யோகினாம் அபி ஸர்வேஷாம் மத்-கதேனாந்தர்-ஆத்மனா
ஷ்ரத்தாவான் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத:

"எல்லா யோகிகளுக்கு மத்தியில், எவனொருவன் பெரும் நம்பிக்கையுடன் எப்போதும் என்னில் நிலைத்து, தன்னுள் என்னை எண்ணி, எனக்கு திவ்யமான அன்புத் தொண்டு புரிகின்றானோ, அவனே யோகத்தில் என்னுடன் மிகவும் நெருங்கியவனும் எல்லாரையும்விட உயர்ந்தவனும் ஆவான். இதுவே எனது அபிப்பிராயம்." எனவே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று ஜபித்துக் கொண்டு எப்போதும் கிருஷ்ணரை தன் மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் பக்தனே முதல் தர யோகியாவான். அதுவே பகவத்-பக்தி-யோகம் என்று அழைக்கப்படுகிறது. ஒரு பக்தர் எல்லா சட்டதிட்டங்களையும் கடைப்பிடித்து நல்ல முறையில் முன்னேற்றம் கண்டால், ஒருநாள் அவர் கடவுளை உள்ளபடி புரிந்துகொண்டு, பிரஸன்ன-மனஸராக, அதாவது, கவலையும் ஏக்கமும் இன்றி ஆனந்தமும் அறிவும் நிறைந்த நபராக ஆக முடியும்.



ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஜபித்துக் கொண்டு எப்போதும் கிருஷ்ணரை தன் மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் பக்தனே முதல் தர யோகியாவான்.

## கடவுள் மலிவானவரா?

கடவுள் மலிவானவர் அல்ல. "வாருங்கள், நான் உங்களுக்குக் கடவுளைக் காட்டுகிறேன். நீங்கள் எந்த விதிமுறைகளையும் கடைப்பிடிக்க தேவையில்லை," என்று ஏமாற்றுக்காரர்கள் கூறுகின்றனர். கடவுளை மலிவாகப் பெற விரும்புவோர் அவர்களால் ஏமாற்றப்படுகின்றனர், மக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பல ஏமாற்றுக்காரர்கள் உள்ளனர். கடவுளைப் புரிந்துகொள்வதற்கான உண்மையான முறை விஞ்ஞானபூர்வமானதாகும். ஓர் உதாரணம் தருகிறேன்: "வேதியியல் பாடத்தை ஒரு நொடியில் கற்றுத் தருகிறேன். எனக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தால் போதும்," அல்லது, "நான் ஒரு நொடியில் கணிதப் பாடத்தைக் கற்றுத் தருகிறேன், எனக்கு சிறிது பணம் தாருங்கள்," என்று யாரேனும் கூறினால், அத்தகு சாத்தியமற்ற கூற்றுகளை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? நிச்சயமாக ஏற்க மாட்டீர்கள். ஆனால், கடவுளை மலிவான முறையில் புரிந்துகொள்ளலாம் என்று கூறி மக்களை நம்ப வைத்து தவறான முறையில் வழிநடத்தக்கூடிய அயோக்கியர்கள் ஏன் அனுமதிக்கப்படுகின்றனர்? பக்தி யோகம் என்பது ஒரு விஞ்ஞானம், வெறும் உணர்ச்சி அல்ல.

## சாஸ்திரங்கள் இல்லாத இறையுணர்வா?

ரூப கோஸ்வாமி நமக்குப் பின்வருமாறு போதிக்கின்றார்:

ஷ்ருதி-ஸ்ம்ருதி-புராணாதி- பஞ்சராத்ர-விதிம் வினா
ஐகாந்திகீ ஹரேர் பக்திர் உத்பாதாயைவ கல்பதே

வேத சாஸ்திரங்களை அணுகாமல், கடவுளைப் புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளும் பல அயோக்கியர்கள் சமுதாயத்தில் தொல்லைகளை உண்டாக்குகின்றனர். நான்கு வேதங்கள் மற்றும் உபநிஷத்துகளைக் கொண்ட ஷ்ருதி, பகவத் கீதை போன்ற ஸ்மிருதி, ஸ்ரீமத் பாகவதம் போன்ற புராணங்கள், நாரத பஞ்சராத்ரம் போன்ற பஞ்சராத்ரங்கள் ஆகியவை அனைத்தும் வேத சாஸ்திரங்கள் எனப்படுகின்றன. கடவுளைப் புரிந்துகொள்வது ஒரு பெரிய விஞ்ஞானம். அங்கீகரிக்கப்பட்ட வேத சாஸ்திரங்களைப் புறக்கணித்துவிட்டு, கடவுளைப் புரிந்துகொள்வதற்கான புதிய முறையை உங்களால் எவ்வாறு உற்பத்தி செய்ய முடியும்?

எனவே, கடவுளைப் பற்றிய விஞ்ஞானப்பூர்வமான அறிவும் தத்துவ அறிவும் எந்தவொரு மதத்தில் இல்லையோ, அத்தகு மதம் வெறும் மனோபாவமே, அது மதம் அல்ல. மேலும், மதம் இல்லாத தத்துவம் வெறும் மனக் கற்பனையே. வேறு விதமாகக் கூறினால், பரம்பொருள் என்றால் என்ன? கடவுள் யார்? போன்ற இறுதிக் கேள்விகளுக்குப் பதிலளிக்காத


எந்தவொரு தத்துவமும் பயனற்றதாகும். மதமும் தத்துவமும் ஒன்று சேர்க்கப்பட வேண்டும், அதன் மூலம் கடவுள் யார், கடவுளுடனான நமது உறவு என்ன, கடவுளுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் யாவை போன்றவற்றை நாம் விஞ்ஞானபூர்வமாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஸ்ரீமத் பாகவதம், அதன் ஆரம்பத்திலிருந்தே போலியான மதங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, கடவுளைப் பற்றிய உண்மையான விஞ்ஞானத்தை, பகவத்-தத்த்வ-விக்ஞானத்தை நமக்கு அளிக்கின்றது. இந்த விஞ்ஞானம் கற்கப்பட வேண்டும், பயிற்சி செய்யப்பட வேண்டும், உணரப்படவும் வேண்டும். இந்த விஞ்ஞான அறிவை நாங்கள் கிருஷ்ண உணர்வின் பெயரில் அளிக்கின்றோம். இது மனோ பாவனையில் சுற்றித் திரிபவர்களுக்கு அல்ல, மாறாக தங்களுடைய வாழ்வை பக்குவப்படுத்திக் கொள்வதில் தீவிரமாக இருப்பவர்களுக்கானதாகும்.

## கிருஷ்ண உணர்வை எளிமையாக வழங்கிய சைதன்ய மஹாபிரபு

பக்குவநிலையை அடைவதும் கிருஷ்ணரைப் புரிந்து கொள்வதும் அவ்வளவு சுலபமானதல்ல. கிருஷ்ணர் பகவத் கீதையில் (7.3) பின்வருமாறு கூறுகிறார்:

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு
கஷ்சித் யததி ஸித்தயே
யததாம் அபி ஸித்தானாம்
கஷ்சின் மாம் வேத்தி தத்த்வத:



ஒரு கோடி ரூபாய் சம்பாதிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல, ஆனால் அதிர்ஷ்டவசமாக ஒரு கோடி ரூபாயை இலவசமாக வழங்குபவரை நீங்கள் சந்திக்க நேர்ந்தால், அனைத்தும் எளிமையாகி விடும். அதுபோல, கிருஷ்ணரை அறிவது எளிதானதல்ல; ஆனால் நீங்கள் சைதன்ய மஹாபிரபுவை அணுக நேர்ந்தால், கிருஷ்ணரைப் புரிந்துகொள்வது எளிதாகிவிடும்.

“ஆயிரமாயிரம் மனிதர்களில் யாரேனும் ஒருவன் பக்குவமடைய முயற்சி செய்யலாம். அவ்வாறு பக்குவமடைந்தவர்களில்கூட யாரேனும் ஒருவனே என்னை உண்மையாக அறிகிறான்.” இருப்பினும், கலி யுகத்தின் வீழ்ச்சியுற்ற ஆத்மாக்களின்மீது கருணை கொண்டிருப்பதால், கிருஷ்ணரே சைதன்ய மஹாபிரபுவாகத் தோன்றி தன்னை தாராளமாக விநியோகம் செய்தார். கிருஷ்ணர் தன்னை தாராளமாக விநியோகிக்க விரும்பினால், அஃது அவருடைய உரிமை. அப்போது வழிமுறைகள் அனைத்தும் சுலபமாகி விடுகின்றன. இல்லையேல் கிருஷ்ணரைப் புரிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. உதாரணமாக, ஒரு கோடி ரூபாய் சம்பாதிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல, ஆனால் அதிர்ஷ்டவசமாக ஒரு கோடி ரூபாயை இலவசமாக வழங்கு பவரை நீங்கள் சந்திக்க நேர்ந்தால், அனைத்தும் எளிமையாகி விடும்.

எனவே, சைதன்ய மஹாபிரபுவை மிகமிக கருணை வாய்ந்த அவதாரம் என்று அவருடைய முதன்மைச் சீடர்களில் ஒருவரான ஸ்ரீல ரூப கோஸ்வாமி புகழ்ந்துள்ளார்: “எல்லா அவதாரங்களைக் காட்டிலும், கிருஷ்ணரைக் காட்டிலும் தாராள மனம் கொண்ட முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ண சைதன்யருக்கு நான் எனது மரியாதை கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை எவரும் அளித்திராத தூய்மையான கிருஷ்ண பிரேமையை அவர் தாராளமாக வழங்கி வருகிறார்.” ரூப கோஸ்வாமியின் பாதச் சுவடுகளை நாம் பின்பற்றினால், சைதன்ய மஹாபிரபுவைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், சைதன்ய மஹாபிரபுவின் ஆசியைப் பெற்றால் கிருஷ்ணரை மிகவும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

(தமிழாக்கம்: ஜெய கோவிந்தராம தாஸ்)

# ஏகாதசி பிரசாதம்

வழங்கியவர்: பவதாரிணி ஸசி தேவி தாஸி

மாதத்தில் இருமுறை வரும் ஏகாதசி திதியன்று பக்தர்கள் அனைவரும் விரதம் மேற்கொள்வது மிகவும் அவசியம். தானியங்கள், பருப்பு வகைகள், பயிறு வகைகள், பீன்ஸ் போன்ற காய்கள், கடுகு போன்றவற்றைத் தவிர்த்து பக்தர்கள் விரதத்தை மேற்கொள்ள வேண்டும். சில பக்தர்கள் பழங்கள் மட்டும் உண்பர், சிலர் நீரை மட்டும் பருகுவர், சிலர் நீர்கூட அருந்த மாட்டார்கள்.

எளிய முறையில் தானியங்களைத் தவிர்த்து விரதம் மேற்கொள்ளும் பக்தர்களின் வசதிக்காக ஏகாதசியன்று சமைக்கக்கூடிய பல்வேறு உணவு வகைகளிலிருந்து இரண்டு வகைகளின் செய்முறையை இங்கு வழங்குகிறோம்.

## ஏகாதசி இட்லி, சட்னி

### தேவையான பொருட்கள்

சாமை அரிசி (மோரியா)—250 கிராம்; தயிர்—250 மில்லி லிட்டர்; கேரட்—2; உருளைக் கிழங்கு—2; பச்சை மிளகாய்—1 அல்லது 2; சீரகம்—1/2 (சிறிய) கரண்டி; உப்பு—1 1/2 (சிறிய) கரண்டி; கொத்தமல்லி; கருவேப்பிலை

### செய்முறை

சாமை அரிசியை தயிரில் பதினைந்து நிமிடம் ஊற வைக்கவும். பின் துருவிய கேரட், உருளைக் கிழங்குகளை அதனுடன் சேர்க்கவும். இவற்றுடன் பச்சை மிளகாய், கருவேப்பிலை, கொத்தமல்லியைச் சேர்க்கவும். பிறகு உப்பையும் சீரகத்தையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும். இட்லி பாத்திரத்தில் இருபது நிமிடம் வேக வைத்து இட்லியைப் போல எடுக்க வேண்டும். ஏகாதசி இட்லி தயார்.

**சட்னி:** பொட்டுக்கடலைக்குப் பதில் வறுத்த வேர்கடலையை உபயோகித்து சட்னி அரைத்தால், ஏகாதசி சட்னி தயார்.

## ஏகாதசி பக்கோடா

### தேவையான பொருட்கள்

ராஜ்கிரா ஆட்டா—500 கிராம்; உருளைக் கிழங்கு—4; முந்திரி—100 கிராம்; மஞ்சள்—1/4 (சிறிய) கரண்டி; மிளகாய் தூள்—தேவையான அளவு; நெய்—4 (சிறிய) கரண்டி; உப்பு—தேவையான அளவு; நறுக்கிய கருவேப்பிலை; கொத்தமல்லி

### செய்முறை

உருளைக் கிழங்கை வேகவைத்து தோல் எடுக்கவும். பிறகு அதனை ராஜ்கிரா ஆட்டா மாவுடன் சேர்த்து பிசைந்துக் கொள்ளவும். அதனுடன் உப்பு, மிளகாய் தூள், மஞ்சள் தூள், முந்திரி, நெய், கருவேப்பிலை, கொத்தமல்லியைச் சேர்க்கவும். இந்த மாவை கடலை (அல்லது சூரியகாந்தி) எண்ணெயில் பொரித்தால் பக்கோடா தயார்.

**குறிப்பு:** இந்த பக்கோடா மாவில் சிறிதளவும் தண்ணீர் சேர்க்கக் கூடாது. ராஜ்கிரா ஆட்டாவைக் கவனமாகப் பார்த்து வாங்குதல் மிகவும் அவசியம். கோதுமை அல்லது மைதா மாவு துளியும் கலக்காமல் இருக்க வேண்டும்.

## நைவேத்யம் செய்தல்

சமைக்கப்பட்ட உணவை கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்து பிரசாதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். நைவேத்யம் செய்யப்படாத உணவை உண்ணுதல் பாவத்தை உண்பதாகும் என்று கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார். நைவேத்யம் செய்வது குறித்து அறிய, "பக்தி யோகம், ஓர் அறிமுகம்" என்னும் புத்தகத்தைப் படிக்கவும்.



*சமைத்த உணவை கிருஷ்ணருக்கு அன்புடன் நைவேத்யம் செய்யும் பக்தர்*

# கோவிந்தனின் இல்லம்

**மிகுந்த பக்தியுடன் தற்போது ஜெய்ப்பூர் அரண்மனையில் வழிபடப்பட்டு வரும் கோவிந்தஜி விக்ரஹம் விருந்தாவனத்தில் தோன்றியவர். அவரது விருந்தாவன பக்தர்கள் இன்றும் அவரைத் தங்களது இதயத்தில் வைத்துள்ளனர்.**

**வழங்கியவர்: பத்மநாப கோஸ்வாமி**

## ரூப ஸநாதனர்


இன்று ஜெய்ப்பூரில் இருக்கும் கோவிந்தஜி விக்ரஹம், விருந்தாவனத்தில் ஓர் அழகிய கோவிலில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் முதன்மைச் சீடரான ஸ்ரீல ரூப கோஸ்வாமியால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்.

ரூப கோஸ்வாமியும் அவரது மூத்த சகோதரர் ஸநாதன கோஸ்வாமியும் பிராமண குலத்தில் பிறந்தவர்கள். அவர்களின் இயற்பெயர் அமர தேவர், சந்தோஷ தேவர். அவர்கள் கௌட தேசத்தின் (தற்போதைய மேற்கு வங்காளத்தின்) தலைநகரமான ராமகேலியில் வளர்ந்தனர். தந்தையின் அகால மரணத்தினால், நல்ல அரசாங்கப் பணியிலிருந்த அவர்களின் தாத்தாவான முகுந்த தேவரால் வளர்க்கப்பட்டனர். அவர் அவர்களுக்கு சமஸ்கிருதம், மற்றும் அரேபிய மொழிகளைக் கற்றுக் கொடுத்தார்.

ரூப, ஸநாதனர் இருவரும் முஸ்லீம் மன்னரான ஹுசைன் ஷாவின் ஆட்சியில் பிரதம மந்திரியாகவும் கருவூல மந்திரியாகவும் பணியாற்றினர். அவர்களின் பணியில் திருப்தியுற்ற மன்னர், ஸநாதனருக்கு "சாகர் மல்லிக்"



விருந்தாவனத்தில் ஏழு அடுக்குகளில் கட்டப்பட்டு, பின்னர் முகலாயர்களால் இடிக்கப்பட்ட போதிலும் பிரம்மாண்டமாகத் தோற்றமளிக்கும் கோவிந்தஜியின் திருக்கோவில்



கோவிந்தஜியின் அறைக்கு அருகில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள பாடல்

என்றும் ரூபருக்கு "தபீர் காஸ்" என்றும் பெயர்களைச் சூட்டினார். முஸ்லீம்களைப் போன்று தாடி மற்றும் ஆடைகளை உடுத்தியதால் அவர்களும் முஸ்லீம்களாக மாறிவிட்டதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர். இருப்பினும், ரூபர், ஸநாதனர் இருவரும் வேதங்களைப் பற்றி உரையாடியும், விக்ரஹங்களை வணங்கியும், இராதா கிருஷ்ண லீலைகளை நினைத்தும் வாழ்ந்து வந்தனர். உண்மையில் அவர்கள் கிருஷ்ணரின் கருணைக்காக பொறுமையுடன் காத்துக் கொண்டும், அதே சமயம் பற்றின்றி இஸ்லாமிய அரசாங்கத்திற்கு சேவை செய்து கொண்டும் இருந்தனர்.

## பகவான் சைதன்யரின் கருணை

சகோதரர்கள் இருவரும் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் புகழினைக் கேள்வியுற்று, அவரின் கருணையை வேண்டி அவருக்கு ஓலை எழுதினர். ராமகேலிக்கு வந்த மஹாபிரபு அவர்களின் பெயர்களை ரூப கோஸ்வாமி, ஸநாதன கோஸ்வாமி என மாற்றி சகோதரர்களைப் புனிதப்படுத்தினார்.

சில காலம் கழித்து, மஹாபிரபுவிடம் பூரண சரணாகதி அடைவதற்காக, ரூப கோஸ்வாமி தனது வேலை, நண்பர்கள், குடும்பம் என அனைத்தையும் துறந்தார்; ஜார்கண்ட் காட்டின் வழியாக விருந்தாவனத்தினை நோக்கி விரைந்தார். அவர் பிரயாகையை (அலகாபாத்) அடைந்த போது, ஸ்ரீ சைதன்யர், விருந்தாவனத்திலிருந்து திரும்பி வந்து, தஸாஸ்வமேத காட் (படித்துறை) என்னுமிடத்தில் தங்கியிருப்பதாகக் கேள்வியுற்றார். அங்கு விரைந்து சென்ற ரூபர், மஹாபிரபுவிற்குத் தனது வணக்கங்களை அர்ப்பணித்தார். பகவானும் அவரை ஆரத் தழுவினார்.

அதைத் தொடர்ந்து பத்து நாள்களுக்குத் தூய பக்தியின் தர்மத்தைப் பற்றி மஹாபிரபு ரூப கோஸ்வாமிக்கு எடுத்துரைத்தார். அந்த தஸாஸ்வமேத படித்துறையானது, இன்றும் ரூப ஷிக்ஷாஸ்தாலி, அதாவது பகவான் சைதன்யர் ரூப கோஸ்வாமிக்கு பக்தியின் விஞ்ஞானத்தினை போதித்து, அவரை அதன்பால் ஈர்த்த இடம் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ சைதன்யர் ரூபரிடம், முதலில் விருந்தாவனத்தை தரிசித்துவிட்டு, பின்னர் ஜகந்நாத பூரியில் தன்னைச் சந்திக்கும்படி கூறினார்.


பகவான் சைதன்யரின் பெரும் பக்தரும் கௌட தேசத்தில் முன்பு ஜமீன்தாராக இருந்தவருமான சுபுத்தி ராய் என்பவரை ரூபர் மதுராவில் சந்தித்தார். ரூப கோஸ்வாமியை விரஜ மண்டலம் என்று அழைக்கப்படும் விருந்தாவனம் முழுவதும் அழைத்துச் சென்ற சுபுத்தி ராய், இராதா கிருஷ்ணரின் லீலைகள் நடைபெற்ற பல்வேறு இடங்களை காட்டினார்.

குறுகிய காலம் விருந்தாவனத்திலிருந்த ரூபர், பின்னர் பூரிக்குச் சென்றார். அங்கு கடற்கரையின் அருகிலிருந்த ஹரிதாஸ தாகூரின் குடிலில் தங்கிய போது, விதக்த மாதவ, லலித மாதவ என்னும் இரண்டு நாடகங்களை எழுதினார். ஸ்ரீ சைதன்யர் தினந்தோறும் ரூபரையும் ஹரிதாஸரையும் சந்தித்து கிருஷ்ணரைப் பற்றி உரையாடி வந்தார். பத்து மாதங்கள் கழித்து பகவான் சைதன்யர் ரூபரை விருந்தாவனத்திற்குச் செல்லும்படி பணித்தார்.

## கோவிந்தஜியை கண்டெடுத்தல்

விருந்தாவனத்திற்குத் திரும்பிய ரூப கோஸ்வாமி, நீண்ட பிரிவுக்குப் பிறகு ஸநாதனரைச் சந்தித்தார். அவர்கள் இருவரும் இணைந்து பல்வேறு புத்தகங்களை எழுதினர், கிருஷ்ண உணர்வைப் பற்றி போதித்தனர், மேலும், இராதா கிருஷ்ண லீலைகள் நிகழ்ந்த இடங்களைக் கண்டுபிடித்தனர்.

சாஸ்திரங்களின் உதவியுடன், 5,000 வருடங்களுக்கு முன்பு கிருஷ்ணரின் கொள்ளுப்பேரனும் மதுராவின் மன்னனுமான வஜ்ரநாபனால்



கோவிந்தனின் தோற்றத்திற்குக் காரணமான
ஸ்ரீல ரூப கோஸ்வாமி


விருந்தாவனத்திலுள்ள யோக பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அழகிய கோவிந்தஜி விக்ரஹத்தினைப் பற்றி அறிந்தனர். தொலைந்து போன அந்த விக்ரஹத்தினைக் கண்டெடுக்க விருப்பம் கொண்ட ரூபரும் ஸநாதனரும் விருந்தாவனம் முழுவதும், "ஓ! கோவிந்த, கோவிந்த" என்ற கூக்குரலுடன் தேடிக் கொண்டிருந்தனர். ஒருநாள், அவர்கள் தேடும் யோகபீடம் தற்போது *கோமா தீலா* என்று அழைக்கப்படுவதாக ஒரு பிராமணச் சிறுவன் ரூப கோஸ்வாமியிடம் கூறினான். அம்மலையின் உச்சியிலுள்ள ஒரு துளையில் பசு ஒன்று தினமும் தானாகவே பாலைச் சுரந்து வருவதாகவும் கூறினான். *கோமா தீலாவில்* ஏதோ அதிசயம் உள்ளது என்பதை உணர்ந்த ரூபர் விருந்தாவனவாசிகளை அவ்விடத்தினைத் தோண்டும்படி பணித்தார். அவர்கள் தோண்டியபோது, மிகப்பெரிய அற்புதமான கிருஷ்ண விக்ரஹத்தினைக் கண்ட அனைவரும், ஒருமித்த குரலுடன் "கோவிந்த தேவ் கீ ஜெய்," "கோவிந்த தேவ் கீ ஜெய்" என போற்றினர்.

கோவிந்தஜியின் தோற்றத்தைக் கேள்வியுற்ற பகவான் சைதன்யர், பூரியிலிருந்து விருந்தாவனத்திற்குச் சென்ற காஷீஸ்வர பண்டிதரிடம் மற்றுமொரு கிருஷ்ண விக்ரஹத்தினைக் கொடுத்தனுப்பினார். *கௌர கோவிந்தர்*, அதாவது "பொன்னிற கோவிந்தர்" என்றழைக்கப்பட்ட அவ்விக்ரஹத்தினை காஷீஸ்வர பண்டிதர் கோவிந்தஜியின் அருகிலேயே பிரதிஷ்டை செய்தார். கௌர கோவிந்தர் இன்றும் ஜெய்ப்பூரிலுள்ள கோவிந்தஜியின் கோவில் வளாகத்தினுள் பூஜிக்கப்படுகின்றார்.

## விருந்தாவனத்தில் கோவிந்தஜியின் கோவில்

விருந்தாவனத்திலுள்ள கோவிந்தஜியின் திருக்கோவில், ஜீவ கோஸ்வாமியின் காலத்தில், மான் சிங் என்னும் மன்னரால் 1590ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அது விருந்தாவனத்திலேயே இரண்டாவது பழமையான கோவிலாகும். அரசாங்க கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சிவப்புக் கற்களை முகலாயப் பேரரசர் அக்பர் தனது நண்பரான மான் சிங்கிற்கு நன்கொடையாக வழங்க, இத்திருக்கோவில் அக்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. அது மட்டுமின்றி, கோவில் பராமரிப்பிற்காக பேரரசர் அக்பர் 70 ஏக்கர் நிலத்தினையும் வழங்கினார்.

கருஞ் சிவப்புக் கல், அலங்காரமாக வடிவமைக்கப்பட்டுள்ள வளைவுகள், கோவிலின் பிரம்மாண்டமான அளவு ஆகியவை கோவிந்தஜியின் கோவிலை மற்ற கோவில்களிலிருந்து தனித்துக் காட்டுகின்றது. கோவிலின் நடுவிலுள்ள மிக உயரமான அரை கோள வடிவிலான கோபுரத்திலுள்ள பிரம்மாண்டமான தாமரை மலர் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் ஒரே கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது. வெளியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், இத்திருக்கோவில் அக்பரால் கொடுக்கப்பட்ட கற்களைக் கொண்டு இராஜா மான் சிங்கினால் கட்டப்பட்டுள்ளது



வரைபடம்: கலாநிதி தாஸ்

*பசு ஒன்று ஒரு குன்றின் உச்சியில் இருந்த துளையின் வழியாக தானாகவே பாலைச் சுரந்து வருவதைக் கேள்விப்பட்ட ரூப கோஸ்வாமி, அவ்விடத்தினைத் தோண்டிப் பார்த்தபோது, கோவிந்தஜியைக் கண்டெடுத்தார்.*

என்று எழுதப்பட்டுள்ளது. மேலும், கோவில் கட்டுமானப் பணி நிறைவுற்ற ஆண்டு, தலைமைக் கட்டுமானர், கோவிலை வடிவமைத்தவரின் பெயர்கள் ஆகியவையும் பொறிக்கப்பட்டுள்ளன.

விக்ரஹ அறையின் பின்பக்கமாக பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு கல்வெட்டில், முழுவதுமாக படிக்க இயலாத நிலையில், ஜீவ கோஸ்வாமியின் கோவிந்தாஷ்டகம் காணப்படுகிறது.

## கோவிந்தஜி ஜெய்ப்பூர் செல்லுதல்

1669ஆம் ஆண்டில் ஔரங்கசீப் தலைமையிலான முகலாயர்கள் விருந்தாவனத்தில் இருந்த கோவிந்தஜி கோவில் உட்பட பெரும்பாலான கோவில்களைப் பெருமளவில் சிதைத்தனர். கோவிலிலிருந்து இராதா கோவிந்தரை அகற்றிய பக்தர்கள், அவரை இரகசியமாக இராதா குண்டத்திற்கும், அதன் பின்னர் காம்ய வனத்திற்கும், இறுதியாக ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள கோவிந்தபுரத்திற்கு கொண்டு சென்றனர்.

1772ஆம் ஆண்டு ஜெய்ப்பூர் அரசரால், அரண்மனைக்குப் பின்புறம் இருந்த தோட்டத்தில் கோவிந்தஜி வைக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரை தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் இராதா கோவிந்தர் மற்றும் கௌர கோவிந்தரின் தரிசனத்திற்காக வருகின்றனர். இங்குள்ள பூஜாரிகளும் இராதா கோவிந்தரை அன்புடனும் கவனத்துடனும் வழிபடுகின்றனர்.

1819-1825ல் நந்த குமார் பாலு என்பவர் மூல விக்ரஹங்களான இராதா கோவிந்தரின் விரிவங்கமாக பிரதிபூ விக்ரஹங்களை வழிபட கோவில் ஒன்றினை நிறுவினார். இக்கோவில் விருந்தாவனத்தின் பழைய கோவிந்தஜி கோவிலின் பின்புறத்தில் நிறுவப்பட்டுள்ளது. இன்றும் தினந்தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் அவரை வழிபட வருகின்றனர்.

முகலாயர்களால் சிதைக்கப்பட்ட அழகிய இராதா கோவிந்தஜியின் திருக்கோவில், 1873இல், அதாவது, சுமார் 200 ஆண்டுகள் கழித்து, மதுரா மாவட்டத்தின் நீதிபதியான க்ரோஸ் என்பவரால் புனரமைக்கப்பட்டது. தற்பொழுது இக்கோவில் இந்திய அரசாங்கத்தால் வரலாற்றுச் சின்னமாக பாதுகாக்கப்படுகின்றது.



இன்று ஜெய்ப்பூரில் வழிபடப்பட்டு வரும் இராதா கோவிந்தர்

இராதா கோவிந்தஜியின் இடத்தில், கௌர நிதாய், கிரிதாரி, ஜகந்நாதர், பலதேவர், சுபத்ரை ஆகிய விக்ரஹங்களைக் கோவில் பூஜாரிகள் பிரதிஷ்டை செய்துள்ளனர். ரூப கோஸ்வாமியால் கண்டெடுக்கப்பட்ட யோக மாயையின் விக்ரஹமும் கோவிலின் அடுத்த அறையில் பூமிக்குக் கீழுள்ள சன்னதியில் வைத்து வழிபடப்படுகின்றார்.

விருந்தாவனத்திலுள்ள பக்தர்கள் தங்களது கோவிந்தன் மீண்டும் விருந்தாவனத்திற்குத் திரும்ப வேண்டும் என்று இன்றும் விரும்புகின்றனர். இன்று முகலாயர்களால் எந்தப் பிரச்சனையும் கிடையாது. ஜெய்ப்பூரில் இராதா கோவிந்தர் ஓர் அரசரைப் போன்று வழிபடப்படுகிறார் என்பதை நாங்கள் அறிவோம். இருப்பினும் விருந்தாவனத்திலுள்ள பக்தர்கள் அவரை விருந்தாவன பாவத்துடன் வழிபட விரும்புகின்றனர். தற்போதைய ஜெய்ப்பூர் மன்னர் இந்த வேண்டுதலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என நாங்கள் வேண்டுகிறோம்.

ஸ்ரீ விஷ்வம்பர கோஸ்வாமியின் மகனான பத்மநாப கோஸ்வாமி அவர்கள், விருந்தாவனத்திலுள்ள இராதா ரமணர் கோவிலின் மதிப்பிற்குரிய சேவார்த்திகளுள் ஒருவராவார்.

***(தமிழாக்கம்: ஜெய கிருஷ்ண தாஸ்)***

# போலி சாமியார்களும் உண்மை சாதுக்களும்

வழங்கியவர்: ஜெய கிருஷ்ண தாஸ்

அன்புள்ள இறைவனை உண்மையாகத் தேடும் ஆன்மீக அன்பர்களுக்கு, இன்றைய காலக் கட்டத்தில் மட்டுமின்றி நம் முன்னோர்கள் காலம் தொட்டும், இனி வரும் காலங்களிலும் நாம் அனைவரும் சந்திக்கின்ற முக்கியமான பிரச்சனை: போலிகள். உலகப் பொருள்களில்தான் போலிகள் என்றால், ஆன்மீக வாழ்விலும் போலிகள் உள்ளனர். மக்களிடம் உள்ள நம்பிக்கையினைத் தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு, அதன் மூலம் சராசரி மனிதனைக் காட்டிலும் சுகபோகமாக வாழும் இத்தகு போலிகள், எதன் அடிப்படையில் தோன்றுகின்றனர், அவர்களால் மக்கள் அனைவரையும் எவ்வாறு ஏமாற்ற முடிகின்றது என்பதை இங்கு சற்று விவரமாகப் பார்ப்போம்.

## அடிப்படை காரணம்

ஆன்மீகம் என்றால், தங்களது குடும்ப கஷ்டங்களையும் பணப் பிரச்சனைகளையும் நோய்களையும் தீர்க்கின்ற ஓர் உபகரணம்; அல்லது காலம் போன பின்னே காடு வா வா என்று சொல்லும் போது செல்ல வேண்டிய இடம் என்று மக்கள் எண்ணுகின்றனர். பணம் கொடுத்தால் ஆசிர்வாதம் கிடைக்கும்; அதுவே ஆன்மீகம் என்று நினைப்பவர் ஏராளம். 30% வட்டி தருவதாகக் கூறி இலட்சக்கணக்கான மக்களை ஏமாற்றிய சிட்ஃபண்ட்ஸ் நிறுவனங்களுக்கும், பணம் கொடுங்கள் ஆசி கிடைக்கும் என்று கூறும் ஆன்மீக நிறுவனங்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

இளவயது என்றாலே பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணமும், வாழ்வினை இன்பமாய் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமுமே இன்று மேலோங்கியுள்ளது. இதன் காரணத்தினால், இறைவன் சம்மந்தப்பட்ட பேச்சுகளை எவரும் கேட்பதில்லை, அவரைப் பற்றிப் படிப்பதுமில்லை. அதனால் எழக்கூடிய அறியாமைதான் போலிகள் உருவாகுவதற்கான அடிப்படை காரணம். கடவுளைப் பற்றி எதுவும் தெரியாமல், காலத்தின் நிர்பந்தத்தினால் கடவுளை வணங்க முற்படுவோர், அவரை எவ்வாறு வழிபடுவது, எந்த அடிப்படையில் யாரை நம்புவது போன்றவற்றை அறியாதவர்களாக உள்ளனர். இத்தகு அறியாமையை களைய, முதலில் ஆன்மீகம் என்றால் என்ன என்பதன் அடிப்படை அறிவினை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். பகவத் கீதை போன்ற நூல்கள் அதற்கு உதவும். பகவத் கீதையினை முறையான குரு சீடப் பரம்பரையில் வரும் ஆச்சாரியரின் மூலம் தெளிவுறப் படிப்பவன் போலிகளிடமிருந்து தப்பிக்கலாம்.

## கேள்விகள் கேட்க வேண்டும்

வெறும் மாய மந்திரங்களை எதிர் பார்க்காது, கேள்வி பதில் மூலமாக ஆன்மீக ஞானத்தினைப் பெற முயற்சிக்க வேண்டும். அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸ, கடவுளைப் பற்றிக் கேள்வி கேட்க வேண்டும் என்று வேதாந்த சூத்திரம்

**30% வட்டி தருவதாகக் கூறி இலட்சக்கணக்கான மக்களை ஏமாற்றிய சிட்ஃபண்ட்ஸ் நிறுவனங்களுக்கும், பணம் கொடுங்கள் ஆசி கிடைக்கும் என்று கூறும் ஆன்மீக நிறுவனங்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.**

(1.1.1) கூறுகின்றது. குருக்ஷேத்திர போர்க்களத்தில்கூட அர்ஜுனன் தனது கேள்விகளைக் கொண்டுதான் அறியாமையைப் போக்கிக் கொண்டான். 'அற்புதங்கள் நடக்கின்றன' என்னும் வெறும் வாய் வார்த்தை விளம்பரத்தின் மூலம் அணுகுவது அல்ல ஆன்மீகமென்பது. நான் யார்? அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனின் (முழுமுதற் கடவுளின்) தன்மைகள் யாவை? நமக்கும் அவருக்கும் உள்ள உறவு என்ன? அவரை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்? இங்கு நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? போன்ற வினாக்களுக்கான பதிலை வெறும் உணர்ச்சிபூர்வமாக அணுகாது அறிவுபூர்வமாக அணுக வேண்டும். பகவத் கீதையிலேயே இதுபோன்ற வினாக்களுக்கான விடைகள் உள்ளன.

## ஆன்மீக அறிவு

பகவத் கீதையில் (2.13) கிருஷ்ணர் தெளிவாக உரைக்கின்றார்: "ஒருவனின் உடல் சிறு வயதிலிருந்து இளமைக்கும், இளமையிலிருந்து முதுமைக்கும் மாறுவதுபோலவே, அவன் (ஆத்மா) மரணத்திற்கு பின் வேறோர் உடலை அடைகின்றான்." நாம் இந்த உடலல்ல, ஆத்மா என்பது இதிலிருந்து தெளிவாகப் புரிகின்றது. இறைவன் என்பவர் யார்? பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் பல்வேறு இடங்களில் தானே அனைத்திற்கும் காரணம் என்றும், தானே முழுமுதற் கடவுள் என்றும் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் அவ்வாறு வெறுமனே கூறியதுமட்டுமல்லாது, அர்ஜுனனுக்கு விஸ்வரூப தரிசனத்தையும் காட்டினார். அவருக்கு சேவை செய்ய வேண்டிய நாம் அவரை மறந்திருப்பதன் காரணத்தினால் இவ்வுலகில் வசித்து வருகின்றோம். இதுவே நமது துன்பத்திற்கான காரணம், இதிலிருந்து வெளிவர நமக்கு ஓர் ஆன்மீக குரு அவசியம்.

## போலி குருவின் இதர அடையாளங்கள்

ஆன்மீக குருவை எவ்வாறு அடையாளம் காண்பது? இங்கு தான் பிரச்சனையே. யார் உண்மையானவர், யார் போலி? தன்னிடம் வந்தால் உங்களுக்கு இந்த பலன் கிட்டும், அந்த பலன் கிட்டும் என்று கூறுபவன் நிச்சயம் ஓர் ஏமாற்றுப் பேர்வழியாகவே இருப்பான். குருவின் அருளாசியினால் தனது வியாபாரம் நன்றாக நடக்கிறது என்று ஒருவன் கூறினால், அவன் குருவைப் பற்றியோ ஆன்மீகத்தைப் பற்றியோ எதுவுமே அறியாதவனாகத்தான் இருக்க வேண்டும். மேலும், இந்த உலகம் துன்பமயமானது என்று கிருஷ்ணர் கூறிய பின்னும் (பகவத் கீதை 8.15), இவ்வுலகில் வளமுடன் இனிமையாக வாழலாம் என்று யாரேனும் கூறினால், அவர் ஒரு போலி குரு என்பதை நாம் உடனடியாக உணர்ந்து கொள்ளலாம். கிருஷ்ணரின் லீலைகளை, குறிப்பாக கோபியர்களுடனான லீலைகளை நகல் செய்கின்ற ஒரு பெண் பித்தன் என்றுமே குருவாக இயலாது. இறைவனின் போதனைகளை நாம் பின்பற்ற வேண்டுமேயொழிய நாம் இறைவனாவோம் என்று போதிக்கின்ற அயோக்கியர்கள் என்றுமே குருவாக முடியாது. சந்நியாசிகள் எல்லோரும் காவியுடை அணிவர் என்பது உண்மை; இருப்பினும் காவியுடை அணிந்தவர் அனைவரும் துறவிகள் அல்ல என்னும் யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## குருவின் அவசியம்

இவ்வளவு குழப்பங்களை ஏற்படுத்தும் **"குரு"** தேவையே இல்லை என நினைக்கலாம்; அது முற்றிலும் தவறான எண்ணம். எந்த ஒரு துறைக்கும் குரு (ஆசிரியர்) என்பவர் இல்லாமல், உள்ளதை உள்ளவாறு நம்மால் புரிந்துகொள்ள இயலாது. ஆன்மீகத் துறையினைப் பொறுத்தமட்டில், அத்தகு






**சந்நியாசிகள் எல்லோரும் காவியுடை அணிவர் என்பது உண்மை; இருப்பினும் காவியுடை அணிந்தவர் அனைவரும் துறவிகள் அல்ல என்னும் யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

ஆசிரியர் மிகவும் அவசியம்; ஏனெனில், நம்மிடம் ஆன்மீக ஞானம் துளியும் இல்லையே! உண்மையினை உணர்ந்த ஒருவரை அணுகி, அவரிடமிருந்து இறை ஞானத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று பகவத் கீதையில் (4.34) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே பரிந்துரைத்துள்ளார்.

அறியாமையின் இருளில் பிறந்து, ஜடத்தில் கட்டுண்டு இருப்பவர்களான நாம் நம்மை எவ்வாறு விடுவித்துக் கொள்ள இயலும்? ஒரு கட்டுண்டவன் மற்றொரு கட்டுண்டவனை விடுவிக்க இயலாது. தன்னையுணர்ந்த ஓர் ஆன்மீக குரு மிகவும் அவசியம். போலிகளை காரணம் காட்டி உண்மையான சாதுக்களின் கருணையைத் தவறவிடக் கூடாது.

## உண்மையான ஆன்மீக குருவின் தகுதிகள்

உண்மையான ஆன்மீக குரு, கட்டுண்டு மயக்கத்தில் இருக்கும் ஜீவன்களுக்கு ஞானத்தினைப் போதித்து அவர்களை நல்வழிபடுத்த வேண்டியவர். அவர் சாஸ்திர ஞானத்துடன் விளங்க வேண்டும் என்பது மட்டுமின்றி, வாய், வயிறு, பாலுறுப்பு போன்றவற்றை கட்டுப்படுத்தியவராகவும் இருக்க வேண்டும் என்று உபதேஷாம்ருதத்தில் ஸ்ரீ ரூப கோஸ்வாமி கூறியுள்ளார். தனது சீடர்களை கிருஷ்ண பக்தியில் ஈடுபடுத்துவதைத் தவிர வேறு எந்த செயலிலும் ஈடுபடுத்தாமல், கிருஷ்ணரைத் தவிர வேறு எவரையும் பரம புருஷ பகவானாக ஏற்காமல், கட்டுண்ட மக்களுக்காக தன் போதனைகளை வளைத்துக் கொள்ளாமல், மக்களை கிருஷ்ணரின்பால் வளைக்கத் தெரிந்தவர்தான் உண்மையான குரு. அவர் முறையான குரு சீடப் பரம்பரையில் வந்தவராகவும், ஆன்மீக விஷயங்களைத் தனது சொந்தக் கருத்தின் அடிப்படையில் உரைக்காமல், பரம்பரை வழியாக தான் பெற்ற கருத்தினைத் துளியும் மாற்றமின்றி வழங்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். அவர் மற்றவர்களுக்கு என்ன விஷயங்களை பிரச்சாரம் செய்கின்றாரோ, அதனை அவரும் பின்பற்றக்கூடியவராக இருத்தல் மிகவும் அவசியம்.

## குருவின் கருணை இருந்தால் போதுமா?

இறை வழிபாடு என்பது எளிதான விஷயம் அல்ல. உண்மையான குருவின் கருணையைப் பெற்றால், நாம் ஆன்மீகத்தில் முன்னேற்றம் பெற முடியும். இருப்பினும், நாமும் ஆன்மீகப் பயிற்சியினை மேற்கொள்ளுதல் அவசியம். வெறும் மந்திரத்தினால் மாங்காய் விழாது என்பதுபோல, அடுத்தவரின் முயற்சியில் நாம் இன்புற முடியாது, இன்புறவும் கூடாது. குருவின் உதவியைக் கொண்டு நாம் பக்தித் தொண்டில் சிறப்பாக செயல்பட வேண்டும். எல்லாவற்றையும் குரு பார்த்துக் கொள்வார் என்று எதையும் செய்யாமல் இருக்கக் கூடாது. ‘‘நோகாமல் நோன்பு கும்பிடுவது’’ என்று பொதுவாகக் கூறுவர். இதன் பொருள், எந்தவித ஆன்மீகச் செயல்களிலும் ஈடுபடாமல், கிருஷ்ணரிடம் சரணடையாமல், பலனை மட்டும் அனுபவிக்கலாம் என்று நினைப்பதுவே. அத்தகு எண்ணத்தினை அறவே ஒழித்துவிட வேண்டும்.

## நாம் செய்ய வேண்டிய செயல்

நாம் அனைவரும் கிருஷ்ணரின் சேவகர்கள் என்பதால், கிருஷ்ணரைத் திருப்திபடுத்துவதே நமது கடமை. கிருஷ்ணரைப் பயன்படுத்தி நாம் மகிழ்ச்சியாக வாழலாம் என்று எண்ணக் கூடாது. வயிறு திருப்தியடையும் போது மற்ற புலன்கள் அனைத்தும் திருப்தியடைவதுபோன்று, கிருஷ்ணர் திருப்தியுறும் போது, நாம் அனைவரும் திருப்தியடைய முடியும். மற்றெல்லா பக்தி முறைகளைக் காட்டிலும் இந்த கலி யுகத்தில் கிருஷ்ணரைப் புரிந்து கொள்ளவும் அவர் மீதான அன்பினை வளர்த்துக் கொள்ளவும், அவரது திருநாமத்தினை உச்சாடனம் செய்வதே சிறந்த முறையாகும்.

ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தினை உச்சாடனம் செய்து உண்மையான ஆன்மீக முன்னேற்றத்தை அடைவோம், வாரீர்!

எனவே, உண்மையான ஈடுபாட்டுடன், போலித் தன்மை ஏதுமின்றி, பக்திபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் இறைவனை அணுகுவோம், வாரீர்!

முடிவாக, ஆன்மீகத் தேடுதலை நிறுத்தாதீர்; அற்ப சுகங்களுக்கு இரையாகாதீர்; கிருஷ்ணரின் பாதங்களை, அவர் தம் அடியார்களது துணையுடன் அடைய முயற்சியுங்கள். ஹரே கிருஷ்ண!

*(திரு. ஜெய கிருஷ்ண தாஸ் M.C.A. அவர்கள் சென்னை யிலுள்ள கணிப்பொறி நிறுவனம் ஒன்றில் பணியாற்றியபடி கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்து வருகிறார்.)*


அண்ணன் தீனபந்து
ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அருளிய
உபதேச கதை
www.iskcondesiretree.com
வேத காலத்தில், குருகுலத்தில் படித்துவந்த மாணவர்கள்.
ஊதியமின்றி பாடம் சொல்லிக் கொடுக்கும் தங்களது ஆசிரியருக்காகப் பெற்றோர் அல்லது மற்றவரிடமிருந்து பொருட்களைப் பிச்சையெடுத்துக் கொண்டு வர வேண்டும். அதுவே வழக்கம்
ஒரு கிராமத்திலிருந்த குருகுலத்தில், அதன் ஆசிரியர் தனது தந்தையின் நினைவு நாளை ஒட்டி, அங்கிருந்த மாணவர்களிடம்...
எனக்காக என்ன கொண்டு வருவீர்கள்?
நான் துணி கொண்டு வருவேன்
அங்கிருந்த ஓர் ஏழை மாணவன்,
என் தாயைக் கேட்காமல் நான் எதுவும் கூற இயலாது
சரி. உன் தாயைக் கேட்டுவிட்டு நாளை என்னிடம் சொல்!
அம்மா, என் நண்பர்கள் குருவிற்காகப் பல பொருட்களைத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். நான் என்ன வாக்குறுதி அளிப்பது?
அன்பு மகனே! நாம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளோம், நம்மால் எதுவும் தர இயலாது.
ஆனால் கடவுள், தீனபந்து, அதாவது ஏழைகளின் நண்பர் என்று அழைக்கப் படுகிறார். ஆகவே அவர் ஏதாவது தருவதாக இருந்தால், நீ வாக்குறுதி அளிக்கலாம்.
அவர் எங்கிருக்கிறார்?
எனக்குத் தெரிந்தவரை அவர் காட்டில் இருப்பார்.


தீனபந்து அண்ணா!
தீனபந்து அண்ணா!
எங்கே இருக்கிறீர்கள்?
அப்போது பகவான் கிருஷ்ணர் அங்கு தோன்றினார்.
என்னை எதற்காக அழைத்தாய்?
நான் என்ன வாக்குறுதி அளிக்க வேண்டும்?
தயிர் தருவதாக வாக்களிப்பாயாக
சிறுவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்
என் அண்ணன் தீனபந்து தயிர் தருவார்.
ஓ. நன்று! மிக்க மகிழ்ச்சி.
நிகழ்ச்சியன்று காட்டிற்குச் சென்ற சிறுவன்,
தீனபந்து அண்ணா!
தீனபந்து அண்ணா!
எங்கே இருக்கிறீர்கள்?
கிருஷ்ணா மீண்டும் அவன் முன் வந்தார்
ஒரு சிறிய பானையில் தயிரைக் கொடுத்தார்.






















## கருத்து

**ஓம் பூர்ணம் அத: பூர்ணம் இதம். ஆன்மீக உலகைச் சார்ந்தவை அனைத்தும் பூரணமானவை. கிருஷ்ணரை மறந்து பூவுலகில் துன்பப்படும் ஜீவன்களுக்கு உதவி செய்வதற்காக, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பரமாத்மாவின் வடிவில் அவர்கள் அனைவருடனும் வாழ்ந்து வருகிறார். பூரணமான கிருஷ்ணர், பல்வேறு உடல்களில் அவ்வாறு பரவியுள்ளபோதிலும், அவர் பூரணமான முழுமுதற் கடவுளாவார்.**

# கடின உழைப்பிலிருந்து விடுதலை பெறுதல்

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் அவரது சீடருக்குமிடையில், மார்ச் 1975இல் அமெரிக்காவிலுள்ள டெல்லாஸ் நகரில் நடைபெற்ற உரையாடல்.**

**ஸ்ரீல பிரபுபாதர்:** இறையுணர்வை வளர்த்துக் கொள்வதே மனித வாழ்வின் நோக்கம். ஆனால் தற்போதைய நவீன நாகரிகமோ இறையுணர்வை வளர்ப்பதற்குப் பதிலாக நிர்வாண உணர்வை ஊக்குவிப்பதில் முனைப்பாக உள்ளது. நிர்வாணமாக இருக்க ஆசைப்படுவோர், ஆடையின்றி மரமாக நிற்கும்படி இயற்கையால் தண்டிக்கப்படுவர். சில மரங்கள் ஐயாயிரம் வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியவை. நான் ஸான்ஃபிரான்சிஸ்கோவில் உள்ள ஒரு பூங்காவில் ஐந்தாயிரம் ஆண்டுகளாக இருக்கும் மரங்களைப் பார்த்துள்ளேன்.

**சீடர்:** நாம் உடையுடுத்த வேண்டும் என்றால், கடவுள் நம்மை உடையுடன் படைத்திருக்கலாமே என சிலர் வாதாடுகின்றனர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்த உலகத்தில் நாம் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக உழைப்பு என்பது அவசியமாகிறது. ஆனால் ஆன்மீக உலகத்தில் "உழைக்க வேண்டும்" என்ற அவசியம் இல்லை. நம்முடைய தேவைகள் அனைத்தும் தானாகவே பூர்த்தி செய்யப்படுகின்றன. இதுவே ஆன்மீக உலகத்திற்கும் பௌதிக உலகத்திற்கும் உள்ள வேறுபாடாகும்.



**சீடர்:** கடவுள் நம்மை உடையுடன் படைத்திருக்கலாமே என்று வாதிடும் நிர்வாணப் பிரியர்களிடம், "நாம் உண்ண வேண்டும் என்று கடவுள் நினைத்திருந்தால், உணவுடன் படைத்திருக்கலாமே! எப்படி உணவுக்காக உழைக்க வேண்டி இருக்கிறதோ, அதுபோலவே உடைக்காகவும் உழைக்க வேண்டும்," என்று அவர்களின் பாணியிலே வாதிடலாம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நாம் எதற்காக உழைக்க வேண்டும் என்று விஷ்ணு புராணத்தில் (6.7.61) விவரிக்கப்பட்டுள்ளது.

*விஷ்ணு ஷக்தி: பரா ப்ரோக்தா க்ஷேத்ர-க்ஞாக்யா ததா பரா*
*அவித்யா-கர்ம-ஸம்க்ஞான்யா த்ருதீயா ஷக்திர் இஷ்யதே*

இங்கு கடவுளின் மூன்று விதமான சக்திகள் விளக்கப்படுகின்றன: 1) அந்தரங்க சக்தி அல்லது ஆன்மீக சக்தி, 2) நடுநிலை சக்தி அல்லது ஜீவ சக்தி, 3) பகிரங்க சக்தி அல்லது ஜட சக்தி. நாகரிகம் என்ற பெயரில் நவீன கால மக்கள் தேவையின்றி தங்களது உழைப்பினை மிகுதியாக்கியுள்ளனர். உண்மையில்

இது சிறைச்சாலையில் உழைப்பதற்கு சமம். நாகரிகம் என்றால் கடின உழைப்பு என்று நினைத்துக் கொண்டு, அதிகப்படியான வேலையை உருவாக்கி காலை 5 மணியிலிருந்து இரவு 10 மணிவரை தேவையில்லாமல் உழைக்கிறார்கள். மேலும், அவர்கள் அறியாமையில் இருப்பதால், இத்தகைய உழைப்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தண்டனை என்பதை அறியாமல், உழைப்பே வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டுள்ளனர். வேலைப் பளுவைக் குறைத்து தன்னுணர்வில் நேரத்தைச் செலவிடுவதற்குப் பதிலாக, இன்றைய மக்கள் தங்களது வேலையை அதிகரித்து வாழ்வை சிக்கலாக்கிக் கொண்டுள்ளனர். இதை நாகரிக முன்னேற்றம் என்று கூறிக் கொள்கின்றனர். உண்மையில் இது, *அவித்யா* அறியாமையாகும்.

அனைத்து பொருட்களையும் தடையின்றி சுலபமாக பெறுவதுதான் மனித இயல்பே ஒழிய, வேலை செய்வது அல்ல. அதனால்தான் கடவுள் ஏன் நம்மை உடையுடன் படைக்கவில்லை என்ற வினா எழுகிறது. இந்த கேள்வியிலிருந்தே வேலை செய்வது மனித இயல்பல்ல என்றும், ஆன்மீக இயற்கையில் அனைத்துத் தேவைகளும் தானாகவே நிறைவேற்றப்படுகின்றன என்றும் தெரிய வருகிறது. எனவே, ஒருவன் பணக்காரனான உடனே வேலை செய்வதை விட்டுவிட்டு, மற்றவர்களை வேலை வாங்குவதன் மூலம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறான். ஆதலால் உழைப்பிலிருந்து ஓய்வுபெறுவதே மனித சுபாவமாகும்.

**சீடர்:** பலர் இதை மறுக்கக்கூடும். வேலையில்லாமல் இருப்பது வாழ்வின் மிக இழிவான நிலை என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** மனிதன் கழுதையைப் போல் நாள் முழுவதும் வேலை செய்வதற்காகப் பிறந்தவனல்ல. வேலையைக் குறைத்து நேரத்தைச் சேமித்து ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறுவதுதான் உண்மையான நாகரிகமே அன்றி புலனின்பத்திற்காகக் கழுதை அல்லது பன்றியைப் போல் உழைப்பது அல்ல. இத்தகைய வாழ்க்கை ஸ்ரீமத் பாகவதத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது. *நாயம் தேஹோ தேஹ-பாஜாம் ந்ரு-லோகே கஷ்டான் காமான் அர்ஹதே விட்-புஜாம் யே.* தவம் செய்வதே மனித வாழ்வின் அர்த்தமேயொழிய, நாய் அல்லது பன்றியைப் போல் புலனின்பத்திற்காகக் கடுமையாக உழைப்பதற்காக அல்ல. தவம் எதற்காக என்றால், நம்முடைய வாழ்வைப் புனிதப்படுத்திக் கொள்வதற்காகவும் (*யேன ஸத்த்வம் ஷுத்த்யேத்*) எல்லையில்லா ஆனந்தத்தை அடைவதற்காகவுமே (*யஸ்மாத் ப்ரஹ்ம-ஸௌக்யம் த்வனந்தம்*).

> **வேலையைக் குறைத்து நேரத்தைச் சேமித்து ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறுவதுதான் உண்மையான நாகரிகமே அன்றி புலனின்பத்திற்காகக் கழுதை அல்லது பன்றியைப் போல் உழைப்பது அல்ல.**

நாம் அனைவரும் அளவற்ற ஆனந்தத்திற்காக முயற்சி செய்கிறோம். துரதிர்ஷ்டவசமாக அஃது இந்த உலகத்தில் முடியாது என்பதை மக்கள் அறியவில்லை. ஆதலால் சிறிதளவு இன்பத்திற்காகப் பன்றியை போல் கடுமையாக உழைக்கிறார்கள். பன்றியானது சிறிது மலத்திற்காக இரவுபகலாக அலைகிறது, மலம் கிடைத்ததும் அதைத் தின்று உடலை வளர்த்துக் கொள்கிறது, பின்னர் ஏதோ ஒரு பெண் பன்றியுடன், அது தாயா சகோதரியா மகளா என்ற கவலையின்றி, உறவு வைத்துக் கொள்கிறது. இதுவே பன்றியின் வாழ்க்கை.

மலம் தின்னும் பன்றியின் வாழ்க்கையைப் பின்பற்றுவது மனித வாழ்வின் நோக்கமல்ல. கடுமையான உழைப்பு, பிடித்ததை உண்பது, அளவற்ற உடலுறவு என இன்றைய சமூகம் பன்றியைத்தான் பின்பற்றுகின்றது. உணவு விஷயத்தில் எந்தக் கட்டுப்பாடும் இன்றி, வேண்டாத அனைத்து உணவுகளையும் உண்டு, அதனால் உடலை வளர்த்து, எந்த வேறுபாடுமில்லாமல் இன்றைய மக்கள் உறவு வைத்துக் கொள்கின்றனர். நவீன நாகரிக யுகத்திலுள்ள பலர் இப்படித்தான் வாழ்கின்றனர். இது மனித வாழ்க்கை அல்ல என்று பாகவதம் கடுமையாக எச்சரிக்கின்றது.

**சீடர்:** ஆனால் மக்களிடம் கடின உழைப்பு இல்லையெனில், உலகம் எவ்வாறு இயங்கும்? பொருளாதாரச் சிக்கல் ஏற்படுமல்லவா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை, வாழ்க்கையை எவ்வாறு இனிமையாக வைத்துக்கொள்வது என்பதை பகவான் கிருஷ்ணர் கீதையில் விளக்குகிறார். தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பயிரிடுவதாலும் பசுவிடமிருந்து பாலைப் பெறுவதாலும் எல்லாவிதமான பொருளாதார பிரச்சனைகளும் தீர்க்கப்படும். தானியங்களும் காய்கறிகளும் பயிரிடப்படவில்லை என்றாலும், வாழ்விற்குப் பால், பழம் மட்டுமே போதுமானதாகும். ஆனால் இக்கால மனிதன் பால் தரும் பசுவைக் கொன்று, அதன் மாமிசத்தை உண்கிறான். இதுவா நாகரிகம்?

மனிதர்கள் தங்களது புத்தியை பாவ வாழ்விற்காக உபயோகப்படுத்துகிறார்கள். இதனால், போர், பஞ்சம், பூகம்பம் போன்ற அபாயகரமான இடையூறுகளால் கண்டிப்பாக மனித சமுதாயம் துன்பப்பட வேண்டியிருக்கும்.

(தமிழாக்கம்: உஷா)

# ஐரோப்பாவின் இஸ்லாமிய நாட்டில் நகர சங்கீர்த்தனம்

**வழங்கியவர்: மோஹன தாஸ்**

ஐரோப்பாவில் இருக்கும் குட்டி நாடுகளில் ஒன்று கொசாவா. அந்நாட்டில் நடந்த நாம சங்கீர்த்தன நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டால் நீங்கள் நிச்சயம் பெருமகிழ்ச்சியடைவீர்கள். புனிதமான ரமலான் மாதத்தின் ஒருநாளில், 99 சதவிகிதம் இஸ்லாமியர்கள் வசிக்கும் கொசாவா நாட்டிற்குச் சென்றோம். அங்கு நாங்கள் நாம சங்கீர்த்தனம் செய்யப் போகின்றோம் என்பதைக் கேள்விப்பட்ட பல பக்தர்கள், எங்களுக்கு மிகுந்த எச்சரிக்கை விடுத்தனர். இருப்பினும், சைதன்ய மஹாபிரபுவின் கருணையை அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கு சென்று, பெக் என்னும் நகரத்தில் மிகுந்த பதட்டத்திற்கு மத்தியில் ஹரி நாம சங்கீர்த்தனம் செய்தோம். நாங்கள் குரோஷிய மொழியில் பேசியபோது, எங்களை செர்பியர்கள் என்று தவறாக நினைத்து, செர்பியர்களுடனான தங்களது பகையை நினைவில் வைத்து, அந்நாட்டு மக்கள் முதலில் எங்களுடன் வாதம் செய்து எதிர்த்தனர். பின்னர், நாங்கள் குரோஷிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து நாம சங்கீர்த்தனத்தை சற்று வரவேற்றனர்.

அன்று மாலை, அந்நாட்டின் தலைநகரான பிரிஷ்டினாவிற்குச் சென்றோம். நாங்கள் பிரிஷ்டினாவை அடைந்தபோது அங்கு எங்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அந்நாட்டின் பண்பாட்டுத் துறை அமைச்சர், எங்களுக்கு வீதிகளில் நாம சங்கீர்த்தனம் புரிய அனுமதி வழங்கியது மட்டுமின்றி, பாதுகாப்பிற்காகக் காவல் துறையினரையும் நியமித்திருந்தார். நீண்ட நேர நாம சங்கீர்த்தனத்தினால் கவரப்பட்ட மக்கள், பல்வேறு புத்தகங்களை வாங்கிச் சென்றனர். நாம சங்கீர்த்தனத்தை விரைவில் முடிக்க நினைத்த எங்களால், அதனை நிறுத்த இயலவில்லை, மக்களும் நிறுத்த விரும்பவில்லை. பண்பாட்டுத் துறை அமைச்சருடன் எங்களைச் சந்திக்க வந்த தேசிய தொலைக்காட்சியின் நிருபர்களும் எங்களுடன் இணைந்து பரவசத்தில் ஆடத் தொடங்கினர். அவர்கள் எங்களை அருகிலிருந்த மசேடோனியா நகரத்திற்கு அழைத்து அங்கும் நாம சங்கீர்த்தனம் புரிய வைத்தனர் என்பதை வைத்து, நாம சங்கீர்த்தனம் அவர்களை எந்த அளவிற்குக் கவர்ந்தது என்பதை அறியலாம்.

கடந்த எட்டு வருடங்களாக எங்களது நாம சங்கீர்த்தனத்திற்கு ஏற்பாடு செய்யும் தசரத சுத தாஸ் அவர்களின் கூற்றின்படி, இதுவரை நாங்கள் புரிந்த நாம சங்கீர்த்தனத்தில் பிரிஷ்டினாவில் நடந்த நாம சங்கீர்த்தனமே சிறந்ததாகும். ஆத்மார்த்தமான அவ்வுணர்வினை அனுபவித்த பின்னர், மற்ற அனைத்தும் பயனற்றவையாகத் தோன்றுகிறது என்றுதான் கூற வேண்டும்.

**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**



# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### முதல் காண்டம் அத்தியாயம் 2, ஸ்லோகம் 17

ஷ்ருண்வதாம் ஸ்வ-கதா: க்ருஷ்ண: புண்ய-ஷ்ரவண-கீர்தன:
ஹ்ருத்யந்த: ஸ்தோ ஹ்யபத்ராணி விதுனோதி ஸுஹ்ருத் ஸதாம்

### மொழிபெயர்ப்பு

அனைவரின் இதயத்திலும் பரமாத்மாவாக இருப்பவரும், உண்மையான பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்பவருமான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரின் செய்திகளை முறையாகக் கேட்பதும் பாடுவதும் புண்ணியம் தரக்கூடியதாகும். அச்செய்திகளைக் கேட்பதில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டுள்ள பக்தனின் இதயத்திலிருந்து, ஜட இன்பங்களுக்கான ஆசைகளை அவரே அகற்றிவிடுகிறார்.

### பொருளுரை

பரம புருஷ பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் செய்திகளுக்கும் அவருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. எனவே, குற்றங்கள் ஏதுமின்றி, பகவானைப் பற்றிக் கேட்கும்போதும் அவரது புகழைப் பாடும்போதும், அந்த தெய்வீக ஓசையின் வடிவில் பகவான் கிருஷ்ணர் அங்கு எழுந்தருளியுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அத்தகு தெய்வீக ஓசை பகவானுக்கு இணை யான சக்தியைக் கொண்டதாகும். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தன்னுடைய சிக்ஷாஷ்டகத்தில், பகவானின் எல்லா சக்திகளும் அவரது திருநாமத்தில் உள்ளன என்றும், அச்சக்திகளை அவர் தன்னுடைய எண்ணற்ற திருநாமங்களில் உள்ளடக்கியுள்ளார் என்றும் தெளிவாகக் கூறுகிறார். திருநாமத்தை உச்சரிப்பதற்கு கால நியமங்கள் ஏதுமில்லை, தமது வசதிக்கேற்ற காலத்தில் யார் வேண்டுமானாலும் கவனத்துடனும் மரியாதையுடனும் திருநாமத்தை உச்சரிக்கலாம். நம்மீது மிகவும் கருணை கொண்டுள்ள இறைவன், தெய்வீக ஓசையின் வடிவில் தனிப்பட்ட முறையில் நம்முன் தோன்றுகிறார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இறைவனின் திருநாமங்களையும் செயல்களையும் கேட்பதிலும் புகழ்வதிலும் நாம் ருசியற்றவர்களாக உள்ளோம். புனிதமான ஓசையைக் கேட்பதற்கும் பாடுவதற்குமான ருசியை வளர்ப்பது பற்றி நாம் ஏற்கனவே விவாதித்துள்ளோம். இறைவனின் தூய பக்தருக்குத் தொண்டு செய்வதால் அந்த ருசியைப் பெறலாம்.

பகவான் தமது பக்தர்களிடம் பரஸ்பரமான அன்பைப் பரிமாறிக் கொள்கிறார். தனது தெய்வீகத் தொண்டில் நுழைவதற்கான அனுமதியைப் பெறுவதில் ஒரு பக்தன் முற்றிலும் தீவிரமாக இருப்பதையும் தன்னைப் பற்றிக் கேட்பதில் ஆர்வம் காட்டுவதையும், பகவான் காணும்போது, அந்த பக்தர் எளிதில் தம்மிடம் திரும்பி வருவதற்கு உதவும் வகையில், அவரே அந்த பக்தரின் இதயத்தில் இருந்து செயல்படுகின்றார். பகவானுடைய இராஜ்ஜியத்திற்குச் செல்வதில் நமக்கிருக்கும் ஆர்வத்தைக் காட்டிலும், நம்மை மீண்டும் அழைத்துக் கொள்வதில் அவர் அதிக ஆர்வத்துடன் உள்ளார். நம்மில் பெரும்பாலான மக்களிடம் முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதற்கான ஆசைகூட இல்லை. மிகவும் சொற்பமானவர்களே முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்ல விரும்புகின்றனர். ஆனால் இறைவனிடம் திரும்பிச் செல்ல ஆசைப்படும் அனைவருக்கும் ஸ்ரீ கிருஷ்ணர் எல்லா விதங்களிலும் உதவி புரிகின்றார்.

எல்லா பாவங்களிலிருந்தும் முற்றிலும் விடுபட்டாலொழிய பகவானின் இராஜ்ஜியத்திற்குள் எவராலும் நுழைய முடியாது. பௌதிக பாவங்களெல்லாம், இந்த ஜட இயற்கையை அடக்கியாள வேண்டும் என்ற நம்முடைய ஆசைகளின் பலன்களேயாகும். இத்தகைய ஆசைகளிலிருந்து விடுபடுவது மிகவும் கடினமானதாகும். முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதற்கான பாதையில் முன்னேற்றம் காணும் பக்தர்களுக்கு மங்கையரும் செல்வமும் மிகப்பெரிய தடங்கல்களாகும். பக்திப் பாதையிலிருந்த பல்வேறு முன்னோடி பக்தர்களும் இத்தகைய கவர்ச்சிகளுக்கு அடிமையாகி, முக்திப் பாதையிலிருந்து பின்வாங்கியுள்ளனர். ஆனால் ஒருவன் பகவானால் உதவி செய்யப்படும்போது, அவரின் கருணையால் மொத்த வழிமுறையும் மிகவும் சுலபமானதாகின்றது.

மங்கையர் மற்றும் செல்வத்தின் தொடர்பினால் அமைதியை இழப்பதில் ஆச்சரியமில்லை; ஏனெனில், ஒவ்வோர் உயிர்வாழியும் கற்பனைக்கெட்டாத பன்னெடுங் காலத்திற்கு முன்பிலிருந்தே இவற்றுடன் சகவாசம் கொண்டிருக் கின்றான்; மேலும், இயற்கைக்கு எதிரான இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு கால அவகாசம் பிடிக்கிறது. ஆனால் ஒருவர் பகவானின் பெருமைகளைக் கேட்பதில் ஈடுபட்டால், படிப்படியாக அவர் தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து கொள்வார். பகவானின் கருணையால், அத்தகைய பக்தர், குழப்பங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குத்

தேவையான சக்தியைப் பெறுவதுடன், குழப்பத்திற்கான எல்லா காரணங்களும் அவருடைய மனதிலிருந்து படிப்படியாக அகற்றப்படுகின்றன.

## ஸ்லோகம் 18

நஷ்ட-ப்ராயேஷ்வபத்ரேஷு நித்யம் பாகவத-ஸேவயா
பகவத்யுத்தம-ஷ்லோகே பக்திர் பவதி-நைஷ்டிகீ

## மொழிபெயர்ப்பு

பாகவத வகுப்புகளில் தொடர்ந்து பங்கேற்பதாலும் தூய பக்தருக்குத் தொண்டு புரிவதாலும், இதயத்திற்குத் தொந்தரவாக இருப்பவை எல்லாம் ஏறக்குறைய முற்றிலுமாக அழிக்கப்பட்டு, உத்தம ஸ்லோகங்களால் புகழப்படும் பரம புருஷ பகவானுக்கான அன்புத் தொண்டு உறுதியாக நிலைநிறுத்தப்படுகிறது.

## பொருளுரை

நம் இதயத்திலுள்ள அமங்களமான விஷயங்கள் தன்னுணர்வுப் பாதையில் தடைக்கற்களாக கருதப்படுகின்றன, அவற்றை அகற்றுவதற்கான வழிமுறை இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. பாகவத சங்கமே அந்த வழிமுறையாகும். இருவிதமான பாகவதங்கள் உள்ளன: புத்தக பாகவதம், பக்த பாகவதர். இரண்டு பாகவதங்களுமே தகுதியுள்ள வழிமுறைகளாகும். அவை இரண்டும், அல்லது இரண்டில் ஒன்று மட்டும்கூட தடைகளை நீக்குவதற்குப் போதுமானதாகும். பக்த பாகவதர் தனது வாழ்வை புத்தக பாகவதத்திற்கு ஏற்ற முறையில் அமைத்திருப்பதால், பக்த பாகவதர் புத்தக பாகவதத்திற்கு சமமானவர். மேலும், புத்தக பாகவதம், பரம புருஷ பகவானைப் பற்றிய தகவல்களும் அவரது தூய பக்தர்களான பக்த பாகவதர்களைப் பற்றிய தகவல்களும் நிறைந்ததாக உள்ளது. புத்தக பாகவதமும் பக்த பாகவதரும் ஒன்றே.

பக்த பாகவதர் பரம புருஷ பகவானின் நேரடியான பிரதிநிதியாவார். எனவே, பக்தபாகவதரைத்திருப்திப்படுத்துவதால் புத்தக பாகவதத்தின் நன்மையை ஒருவன் பெற முடியும். பக்த பாகவதருக்கோ புத்தக பாகவதத்திற்கோ தொண்டு செய்வதால் ஒருவன் பக்திப் பாதையில் படிப்படியாக முன்னேற்றம் அடைகின்றான் என்பதை மனித புத்தியால் புரிந்துகொள்ள இயலாது. ஆனால், தனது முற்பிறவியில் ஒரு பணிப் பெண்ணின் மகனாக இருக்க நேர்ந்த ஸ்ரீ நாரததேவரின் மூலமாக இவ்வுண்மை விளக்கப்படுகின்றது. அப்பணிப்பெண் சில முனிவர்களுக்கு எடுபிடி வேலைகள் செய்து வந்தாள், அப்போது நாரதரும் அம்முனிவர்களுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது. சாதுக்களுடன் சகவாசம் கொண்டதாலும் அவர்கள் உண்ட உணவின் மீதியை உண்டதாலும், ஒரு பணிப் பெண்ணின் மகனுக்கு சிறந்த பக்தராகவும் ஸ்ரீல நாரததேவர் என்ற புகழ்பெற்ற புண்ணிய புருஷராகவும் மாறும் வாய்ப்பு கிட்டியது. இவையே பாகவத சங்கத்தின் அதிசயிக்கத்தக்க விளைவுகளாகும். இவ்விளைவுகளை நடைமுறையில் புரிந்துகொள்வதற்கு, பாகவத சங்கத்தினை சிரத்தையான முறையில் ஏற்பவன் தெய்வீக ஞானத்தை மிகவும் சுலபமாக அடைகிறான் என்பதையும், அதன் மூலம் ஒருவர் பகவானுக்கான பக்தித் தொண்டில் நிலைக்க முடியும் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். பாகவதர்களின் வழிகாட்டுதலின்படி எந்த அளவிற்கு ஒருவர் பக்தித் தொண்டில் முன்னேற்றம் அடைகின்றாரோ, அந்த அளவிற்கு அவர் பகவானின் அன்பு கலந்த பக்தித் தொண்டில் நிலைத்திருக்கின்றார். எனவே, இந்த புத்தக பாகவதத்தின் செய்திகள் பக்த பாகவதர்களின் மூலம் பெறப்பட வேண்டும்; மேலும் இந்த இரு பாகவதர்களின் கலப்பும் ஒரு புதிய பக்தர் மேலும் மேலும் முன்னேற்றம் காண உதவி புரிகின்றது. (தொடரும்)






# பகவத் கீதை

## உண்மையுருவில்

### —ஒரு கண்ணோட்டம்

**அத்தியாயம் பத்து**




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய “பகவத் கீதை உண்மையுருவில்,” 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் ஒன்பது அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **பத்தாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# பூரணத்தின் வைபவம்

### ஒன்பதாம் அத்தியாயத்தின் சுருக்கம்

பொறாமையற்ற நபர்கள் கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதால் பெறக்கூடிய அறிவு, எல்லா அறிவின் அரசனாகவும் மிகமிக இரகசியமானதாகவும் உள்ளது. கிருஷ்ணர் அனைத்தையும் படைப்பவர், ஆனால் அவர் அவற்றிலிருந்து வேறுபட்டவர். ஜட இயற்கையின் மீது தனது பார்வையைச் செலுத்துவதாலேயே அவர் அதைப் படைக்கின்றார். இருப்பினும் முட்டாள்கள் அவரை சாதாரண மனிதனாக நினைத்து ஏளனம் செய்கின்றனர். அத்தகையோரின் அனைத்து முயற்சிகளும் அழிந்துவிடும். கிருஷ்ணரை இறைவனாக ஏற்று, எப்போதும் கீர்த்தனத்தில் ஈடுபட்டுள்ள மஹாத்மாக்கள் அவரது தெய்வீக இயற்கையின் பாதுகாப்பில் இருக்கின்றனர். கிருஷ்ணரை நேரடியாக வழிபடாத மக்களில் சிலர் அவரது பௌதிகத் தோற்றத்தையும், சிலர் தேவர்களையும் வழிபடுகின்றனர். தேவர்களை வழிபடுவோர் தேவர்களை அடைவர் என்றபோதிலும், அத்தகு வழிபாடு தவறானதாகும். கிருஷ்ணரைத் தூய பக்தியுடன் வழிபடுவோரை அவரே கவனித்துக் கொள்கிறார். கிருஷ்ணரை வழிபடுதல் மிகவும் எளிதானது. அனைவரையும் சமமாகக் காணும் கிருஷ்ணர் தனது பக்தர்களிடம் தனிக்கவனம் செலுத்துகிறார். பக்தன் ஏதேனும் காரணத்தினால் தவறு செய்தாலும், அவனை கிருஷ்ணர் பக்தனாகவே கருதி, விரைவில் அவன் நல்லவனாக மாற உதவி புரிகிறார். பக்தித் தொண்டில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் பரம கதியை அடைய முடியும் என்பதால், அனைவரும் கிருஷ்ணரை நினைத்து, அவரது பக்தனாகி, அவரையே வழிபடும்படி பரிந்துரைக்கப்படுகின்றனர்.

### ஒன்பதாம் அத்தியாயத்திற்கும் பத்தாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

ஒன்பதாம் அத்தியாயத்தின் இறுதியில், தூய பக்தித் தொண்டையும் தனது பக்தர்களுடன் பழகும் முறையையும் விளக்கிய கிருஷ்ணர், **மன்-மனா பவ மத்-பக்தோ,** “என்னையே நினைத்து என்னுடைய பக்தனாகு,” என்று தனது மிகமிக இரகசியமான உபதேசத்தை வழங்கினார். ஒன்பதாம் அத்தியாயத்தில் கூறப்பட்ட அறிவின் இரகசியமான பகுதியினை கிருஷ்ணர் இந்த அத்தியாயத்திலும் தொடர்கிறார். அத்தியாயம் பத்து, “பூரணத்தின் வைபவம்” என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இவ்வத்தியாயத்தில் கிருஷ்ணர் தனது ஐஸ்வர்யங்கள், சக்திகள் மற்றும் நிலையைப் பற்றி மேலும் விளக்குகிறார்.

## கிருஷ்ணரே அனைத்திற்கும் மூலம்

அர்ஜுனன் தனது நண்பன் என்பதால், தன்னைப் பற்றிய விவரங்களை கிருஷ்ணர் அவனுக்கு தாராளமாக எடுத்துரைக்கின்றார். வாழ்வின் குறிக்கோள் பக்தியே என்பதையும் தானே பரம புருஷ பகவான் என்பதையும் ஏற்கனவே கூறிவிட்ட கிருஷ்ணர், அர்ஜுனனின் நம்பிக்கையை மேலும் வலுப்பெறச் செய்வதற்காக தன்னுடைய வைபவங்களைப் பற்றி இந்த அத்தியாயத்தில் கூறுகிறார். ஒரு நண்பனின் மாபெரும் நிலையை உணரும்போது, அவரை நண்பராகப் பெற்றவன் தன்னை மிகவும் அதிர்ஷ்டசாலியாக நினைப்பதைப் போல, கிருஷ்ணரின் மிகவுயர்ந்த நிலையை நாம் உணர்ந்தால், அதனால் பெருமைப்படுவது நிச்சயம்.

தேவர்கள், மாபெரும் ரிஷிகள் என அனைவருக்கும் கிருஷ்ணரே மூலமாக இருப்பதால், யாராலும் அவரது எல்லையற்ற வைபவங்களை முழுமையாக உணர முடியாது. இருப்பினும் அவரே தன்னுடைய வைபவங்களை நமக்கு தெரியப்படுத்தும்போது, நம்மால் அவற்றின் ஒரு சிறு பகுதியைப் புரிந்துகொண்டு அவருக்குத் தொண்டாற்ற முடியும். கிருஷ்ணரை பிறப்பற்றவராகவும் ஆரம்பமற்றவராகவும் எல்லா உலகங்களின் இறைவனாகவும் அறிபவன் தனது எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவான். புத்தி, ஞானம், மயக்கத்திலிருந்து விடுதலை, வாய்மை, அகிம்சை, தவம், தானம் போன்ற பல்வேறு குணங்களும் கிருஷ்ணரால் படைக்கப்பட்டவையே. சப்த ரிஷிகள், நான்கு குமாரர்கள், இதர உயிரினங்கள் என அனைத்தும் கிருஷ்ணரிடமிருந்து தோன்றியவை என்பதை உண்மையாக அறிபவன், கிருஷ்ணரின் மீதான களங்கமற்ற பக்தித் தொண்டில் ஈடுபடுகிறான்.



## கீதையின் முக்கியமான நான்கு ஸ்லோகங்கள்

என்னைப் பற்றி அறிபவன் எனது பக்தித் தொண்டில் ஈடுபடுகிறான் என்று கூறிய கிருஷ்ணர், பத்தாம் அத்தியாயத்தின் எட்டு முதல் பதினொன்று வரையுள்ள நான்கு ஸ்லோகங்களில் கீதையின் அனைத்து கருத்துகளையும் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். எனவே, இந்த நான்கு ஸ்லோகங்களும் கீதையின் *சதுர்-ஸ்லோகங்கள்* என்று அறியப்படுகின்றன.

**ஸ்லோகம் எட்டு:** "ஜட, ஆன்மீக உலகங்கள் அனைத்திற்கும் மூலம் நானே. எல்லாம் என்னிடமிருந்தே தோன்றுகின்றன. இதனை நன்றாக அறிந்த அறிஞர்கள், எனது பக்தித் தொண்டில் ஈடுபட்டு, இதயபூர்வமாக என்னை வழிபடுகின்றனர்." தானே முழுமுதற் கடவுள் என்பதையும் பக்தியே உயர்ந்த வழிமுறை என்பதையும் கிருஷ்ணர் இதில் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

**ஸ்லோகம் ஒன்பது:** "எனது தூய பக்தர்களின் சிந்தனைகள் என்னில் மூழ்கியுள்ளன, அவர்களது வாழ்க்கை எனது தொண்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மேலும், என்னைப் பற்றி தங்களுக்குள் உரையாடுவதிலும் ஒருவருக்கொருவர் உபதேசித்துக் கொள்வதிலும் இவர்கள் பெரும் திருப்தியும் ஆனந்தமும் அடைகின்றனர்." தனது பக்தர்கள் தன்னை எவ்வாறு வழிபடுகின்றனர் என்பதை கிருஷ்ணர் இங்கு தெளிவுபடுத்துகிறார். பக்த சங்கத்தின் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

**ஸ்லோகம் பத்து:** "எனது அன்புத் தொண்டில் இடையறாது ஈடுபட்டிருப்பவர்களுக்கு, என்னிடம் வந்தடைவதற்குத் தேவையான அறிவை நானே வழங்குகிறேன்." தன்னை வழிபடும் பக்தர்களிடம் தான் எவ்வாறு நடந்து கொள்கிறேன் என்பதை கிருஷ்ணர் இங்குத் தெரியப்படுத்தி நம்மை ஊக்கப்படுத்துகிறார். கிருஷ்ண பக்தியை ஏற்றுக்கொள்வோர் தங்களிடம் போதிய அறிவு இல்லை என்று எண்ண வேண்டாம், தேவையான அறிவை கிருஷ்ணரே கொடுப்பார் என்ற நம்பிக்கை இதன்மூலம் ஊட்டப்படுகிறது.

**ஸ்லோகம் பதினொன்று:** "அவர்களிடம் விசேஷ கருணையைக் காட்டுவதற்காக, அவர்களது இதயத்தினுள் வசிக்கும் நான், அறியாமையினால் பிறந்த இருளை ஞானமெனும் சுடர்விடும் தீபத்தினால் அழிக்கின்றேன்." கிருஷ்ணர் தனது பக்தனுக்கு அறிவைக் கொடுக்கும்போது, அவனது இதயத்தில் இருக்கும் அனைத்து இருளும் மறைந்துவிடுகிறது.

கிருஷ்ணர் யார் என்பதையும் அவர் தனது தூய பக்தர்களிடம் எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதையும் அறிந்த நபர்கள் இயற்கையாக அவரிடம் சரணடைவர். அதன்படி, சதுர் ஸ்லோகத்தைக் கேட்ட பின்னர், கிருஷ்ணரை அர்ஜுனன் மீண்டும் புகழத் தொடங்குகிறான்.

## அர்ஜுனன் கிருஷ்ணரை ஏற்றுக் கொள்ளுதல்

கிருஷ்ணர் உரைத்த சதுர் ஸ்லோகத்தைக் கேட்டவுடன், கிருஷ்ணரே முழுமுதற் கடவுள், பரபிரம்மன், பரம சத்தியம், ஆதி தேவர் என்று அர்ஜுனன் ஏற்றுக் கொண்டான். அர்ஜுனன் கிருஷ்ணருடைய நண்பன்; அதனால் அவன் அவரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டான் என்று சிலர் குறை கூறலாம் என்பதால், எல்லா வேத இலக்கியங்களையும் தொகுத்த வியாச தேவர், மாமுனிவர்களான நாரதர், தேவலர், அஸிதர் போன்ற பலரும் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுள்ளனர் என்று அர்ஜுனன் மேற்கோள் காட்டினான். (தொடர்ச்சி, 26ஆம் பக்கம்)

# கிருஷ்ணரின் ஐஸ்வர்யங்கள்

* நானே பரமாத்மா.
* நானே எல்லா உயிர்களின் ஆரம்பமும், நடுவும், இறுதியும்
* ஆதித்தியர்களில் நான் விஷ்ணு
* ஜோதிகளில் நான் சூரியன்
* மருத்துகளில் நான் மரீசி
* நட்சத்திரங்களில் நான் சந்திரன்
* வேதங்களில் நான் ஸாம வேதம்
* தேவர்களில் நான் இந்திரன்
* புலன்களில் நான் மனம்
* உயிர்வாழிகளில் நான் உயிர்சக்தி
* ருத்திரர்களில் நான் சிவபெருமான்
* யக்ஷ ராக்ஷசர்களில் நான் குபேரன்
* வசுக்களில் நான் அக்னி
* மலைகளில் நான் மேரு
* புரோகிதர்களில் நான் பிருஹஸ்பதி
* சேனாதிபதிகளில் நான் கார்த்திகேயன்
* நீர்த் தேக்கங்களில் நான் சமுத்திரம்
* மகா ரிஷிகளில் நான் பிருகு
* சப்தங்களில் நான் ஓம்
* யாகங்களில் நான் ஜபம்
* அசையாதவற்றில் நான் இமயமலை
* மரங்களில் நான் ஆலமரம்
* தேவ ரிஷிகளில் நான் நாரதன்
* கந்தர்வர்களில் நான் சித்ரரதன்
* சித்தர்களில் நான் கபில முனி
* குதிரைகளில் நான் உச்சைஷ்ரவா
* பட்டத்து யானைகளில் நான் ஐராவதம்
* மனிதர்களில் நான் மன்னன்
* ஆயுதங்களில் நான் வஜ்ராயுதம்
* பசுக்களில் நான் சுரபி
* இன விருத்தியாளர்களில் நான் மன்மதன்
* சர்ப்பங்களில் நான் வாஸுகி
* நாகங்களில் நான் அனந்தன்
* நீர்வாழினங்களில் நான் வருணன்
* முன்னோர்களில் நான் ஆர்யமா
* நீதிபதிகளில் நான் எமன்
* தைத்தியர்களில் நான் பிரஹலாதன்
* அடக்கி ஆள்பவர்களில் நான் காலம்
* மிருகங்களில் நான் சிங்கம்
* பறவைகளில் நான் கருடன்
* தூய்மைப்படுத்துபவர்களில் நான் வாயு
* ஆயுதம் தரித்தவர்களில் நான் இராமன்



பெரும் நீர்த்தேக்கங்களில் நான் சமுத்திரம்

* மீன்களில் நான் மகர மீன்
* நதிகளில் நான் கங்கை
* படைப்புகளில் நானே ஆதி, அந்தம், நடு
* கல்வியில் நான் ஆத்ம ஞானம்
* விவாதிப்போரில் நான் முடிவான உண்மை
* எழுத்துக்களில் நான் அ
* கூட்டுச் சொற்களில் நான் த்வந்த்வ
* நானே தீராத காலம்
* படைப்பாளிகளில் நான் பிரம்மா
* நானே எல்லாவற்றையும் அழிக்கும் மரணம்
* எல்லாவற்றின் உற்பத்தியாளன் நானே
* பெண்களின் புகழ், அதிர்ஷ்டம், அழகிய பேச்சு, ஞாபக சக்தி, அறிவு, உறுதி மற்றும் பொறுமையும் நானே
* ஸாம வேத மந்திரங்களில் நான் பிருஹத் ஸாமம்
* கவிதைகளில் நான் காயத்ரி
* மாதங்களில் நான் மார்கஷீர்ஷ
* பருவங்களில் நான் வசந்தம்
* ஏமாற்றுபவற்றில் நான் சூது
* ஒளிர்பவற்றில் நான் தேஜஸ்
* நானே வெற்றி, நானே தீரச் செயல்
* நானே பலவான்களின் பலம்
* விருஷ்ணிகளில் நான் வாசுதேவன்
* பாண்டவர்களில் நான் அர்ஜுனன்
* முனிவர்களில் நான் வியாசர்
* சிந்தனையாளர்களில் நான் உஷனா
* அடக்கியாளும் முறையில் நான் தண்டனை
* வெற்றியை நாடுபவர்களில் நான் நீதி
* இரகசியங்களில் நான் மௌனம்
* ஞானிகளில் நான் ஞானம்

கிருஷ்ணர் கூறியவை அனைத்தையும் அர்ஜுனன் முழுமையாக ஏற்றான். பாதியை ஏற்று பாதியை மறுக்கக்கூடிய நபர்களால் பகவத் கீதையையும் கிருஷ்ணரையும் புரிந்துகொள்ள முடியாது. நாம் கீதையைப் பின்பற்ற விரும்பினால், அர்ஜுனனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி கீதையை முழுமையாக ஏற்க வேண்டும். கிருஷ்ணர் எவ்வாறு இவ்வுலகம் முழுவதும் வியாபித்துள்ளார் என்பதை அறிய விரும்பிய அர்ஜுனன், அவற்றை விளக்கும்படி கிருஷ்ணரிடம் வேண்டினான். கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதில் ஒருபோதும் சோர்வடையாத அர்ஜுனன், அமிர்தம் போன்ற அவரது வார்த்தைகளை மேன்மேலும் சுவைக்க விரும்பினான்.

## கிருஷ்ணரின் வைபவங்கள்

அர்ஜுனனின் வேண்டுகோளைத் தொடர்ந்து கிருஷ்ணர் தான் இவ்வுலகில் எவ்வாறெல்லாம் வீற்றுள்ளேன் என்பதை எடுத்துரைக்கத் தொடங்கினார். கிருஷ்ணரின் வைபவங்கள் அளவற்றவை என்பதால், அவற்றில் முக்கியமானவற்றை மட்டும் ஒன்றன் பின் ஒன்றாகக் கூறினார். கிருஷ்ணர் கூறிய வைபவங்களைப் பார்க்கும்போது, இவ்வுலகில் சிறப்பானதாக என்னவெல்லாம் உள்ளதோ, அவையனைத்தும் கிருஷ்ணரின் சக்தியே என்பதை நம்மால் உணர முடியும். இவ்வுலகிற்கு ஒளி கொடுக்க எத்தனையோ மூலங்கள் உள்ளபோதிலும், அவற்றில் தலைசிறந்ததாகவும் தன்னிகரற்றதாகவும் விளங்குவது சூரியனே. அந்த சூரியன் கிருஷ்ணரே என்று விளக்கப்படுகிறது. (முழுப் பட்டியல் பக்கம் 25இல் கொடுக்கப்பட்டுள்ளது)

## பத்தாம் அத்தியாயத்தின் நான்கு பகுதிகள்

ஒன்பதாம் அத்தியாயத்துடனான தொடர்பு: கிருஷ்ணரைப் பற்றிய இரகசியமான அறிவினை மேலும் விளக்குதல்

**(1) கிருஷ்ணரே அனைத்திற்கும் மூலம் (10.1-7)**

அனைத்து தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் மூலம்

சப்த ரிஷிகளும் நான்கு குமாரர்களும் மனுவும் கிருஷ்ணரிலிருந்தே தோன்றினர்

பல்வேறு குணங்களும் அவரிலிருந்தே தோன்றுகின்றன

**(2) சதுர் ஸ்லோகங்கள் (10.8-11)**

கிருஷ்ணரே ஆன்மீக பௌதிக உலகங்களின் மூலம்

இதை அறிந்தோர் பக்தியில் ஈடுபடுகின்றனர்

பக்தர்கள் பக்த சங்கத்தில் பகவானைப் பற்றி உரையாடி மகிழ்கின்றனர்

பக்தனுக்குத் தேவையான அறிவை கிருஷ்ணரே வழங்குகிறார்

**(3) அர்ஜுனன் கிருஷ்ணரை ஏற்றுக் கொள்ளுதல் (10.12-18)**

நீரே முழுமுதற் கடவுள், ஆதி தேவர்

வியாசர், நாரதர், அஸிதர், தேவலர் ஆகியோரும் இதையே கூறியுள்ளனர்

உம்முடைய ஐஸ்வர்யங்களை விவரமாகக் கூறும்

உம்மைப் பற்றி கேட்பது என்றுமே இனிமையானது

**(4) கிருஷ்ணருடைய ஐஸ்வர்யங்கள் (10.19-42)**

அனைத்திலும் சிறந்தவன் நானே

அனைத்தும் எனது சக்தியின் சிறு பகுதியே



நட்சத்திரங்களில் நான் சந்திரன்

நீண்ட பட்டியலை தனது வைபவங்களாக எடுத்துரைத்த பின்னர், "இவையனைத்தும் எனது தேஜஸின் சிறு பொறியிலிருந்து தோன்றுபவையே," என்று கூறியதன் மூலம், கிருஷ்ணர் தன்னுடைய உயரிய நிலையை மீண்டும் தெளிவுபடுத்தினார். மேலும், இவற்றை விவரமாக அறிவதற்கு எந்த அவசியமும் இல்லை என்றும், பிரபஞ்சம் முழுவதும் உள்ள அனைத்தும் தன்னால் மட்டுமே தாங்கப்பட்டுள்ளதாகவும் கூறி கிருஷ்ணர் இந்த அத்தியாயத்தினை நிறைவு செய்கிறார்.

திரு. ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், பகவத் தரிசனம் உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.

# இலங்கையில் கிருஷ்ண பக்தி

**வழங்கியவர்: வாசுதேவ தத்த தாஸ்**

மூன்று வருடங்களுக்கு முன்புவரை உள்நாட்டுப் போர் உச்ச கட்டத்தில் இருந்த பூமி. பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அனைத்து துன்பங்களுக்கும் நிரந்தர நிவாரணி கிருஷ்ண உணர்வே. கிருஷ்ண உணர்வை மக்களுக்கு வழங்குதல் என்னும் அவசியமான அவசரத் தேவையை நிறைவேற்ற நமது ஆச்சாரியர்கள் மூன்று வழிகளைப் பரிந்துரை செய்துள்ளனர்:

1) பகவத் கீதை, பாகவதம் போன்ற புத்தகங்களின் மூலம் ஆன்மீக ஞானத்தை வழங்குதல்

2) கிருஷ்ணரின் திருநாமங்களை கீர்த்தனம் செய்தல்

3) கிருஷ்ண பிரசாதத்தினை விநியோகம் செய்தல்.

ஆச்சாரியர்கள் வகுத்த வழிகளைப் பின்பற்றி, இலங்கையின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில், நாங்கள் கிருஷ்ண உணர்வினைப் பிரச்சாரம் செய்து வருகின்றோம். சில நேரங்களில் வடக்குப் பகுதியான யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்கும் சென்று வருவது வழக்கம்.



## இலங்கை—சில துளிகள்

நாங்கள் சமீபத்தில் வவுனியா சென்றிருந்தபோது, காலை நேரத்தில் புத்தக விநியோகத்தின் மூலம் மக்களுக்கு கிருஷ்ண பக்தியை எடுத்துரைத்தோம். மாலை வேளையில் சிந்தாமணி பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில் பகவத் கீதை உபன்யாசம், பிரசாத விநியோகம், நாம சங்கீர்த்தனம் என்று ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பலரும் பயன் பெறச் செய்தோம். இங்கு தற்போது யுத்தக் கலவரம் இல்லை என்றபோதிலும், காவல் துறையினர் தொடர்ச்சியாக ரோந்து வருகின்றனர்.

நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து வவுனியா நீண்ட காலமாக துண்டிக்கப்பட்டிருந்த காரணத்தால், இங்குள்ள மக்களுக்கு ஹரே கிருஷ்ண பக்தர்களைப் பற்றி தெரியவில்லை. இருப்பினும், சாதுக்களை மதிக்கக்கூடிய பண்பாடு கொண்டுள்ள இலங்கை மக்கள் எங்களுக்கு நல்வரவேற்பு அளித்தனர். இங்குள்ள பேருந்துகளிலும் புகைவண்டிகளிலும் சாதுக்களுக்கு என்று தனிப்பட்ட இருக்கைகள் உள்ளன. "மத குருமார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது" என்று அங்கு எழுதப்பட்டிருக்கும். அது பெரும்பாலும் புத்த மதத் துறவிகளுக்கான இடம் என்றபோதிலும், அங்கு எங்களுக்கும் இடம் தரப்படுகிறது.

சில நேரங்களில் மக்களால் புத்தகங்களை வாங்க இயலாது போனாலும், நமக்கு இருக்கைகளை கொடுத்து பண்பாட்டுடன் நடந்து கொள்கின்றனர். மேற்கத்திய நாடுகளில் புத்தக விநியோகம் செய்து வந்த நான், முகத்தில் அறைவது போன்று கதவுகள் மூடப்படுவதைக் காண்பது வழக்கம். ஆனால் இங்குள்ள பணிவான வரவேற்பு எனக்கு மிகவும் ஆச்சரியமான ஒன்றுதான்.

**இடது:** வவுனியாவின் தெருக்களில் புத்தக விநியோகம் செய்யும் பக்தர்

## வவுனியாவின் கடைவீதிகளில்

வவுனியாவின் கடைவீதிகளில் உள்ள கடைகளுக்கு மூன்று குழுக்களாக நாங்கள் பிரிந்து சென்றபோது, மக்களின் கவனத்தினை எளிதாக ஈர்க்க முடிந்தது. "வெள்ளைக்கார சாமியைப் பாருங்கள்" என்ற குரல் ஆங்காங்கே ஒலித்தது. ஒரு நகைக் கடையினுள் நாங்கள் நுழைந்தபோது, எங்களை வரவேற்று அனைவரும் அமைதி காத்தனர். நான் தமிழில் பேசத் தொடங்கியபோது, அவர்களின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவர்கள் எங்களுக்கு இருக்கைகள் வழங்க, "மனித குலத்திற்கு உயரிய தொண்டு செய்வதற்காக நாங்கள் ஆன்மீக ஞானத்தினை வழங்குகின்றோம்" என எடுத்துரைத்தோம். *பகவத் கீதை, கிருஷ்ணா, இராமாயணம்* ஆகிய புத்தகங்களும் பகவத் தரிசனம் பத்திரிகையும் அங்கிருந்த பலரால் வாங்கப்பட்டன.

சில நேரங்களில் மக்கள் புத்தகங்களை வாங்க மறுத்து, எளிய காரணங்களைக் கூறும்போது, "ஐயா, எங்களுக்கு உதவுவது உங்களது கடமை" என நாங்கள் கூற, அவர்களும் உடனடியாக, "நிச்சயமாக, சுவாமிஜி," எனக் கூறுவர். எங்களிடம் இருந்த அனைத்து புத்தகங்களையும் வாங்கிக் கொண்ட ஒரு வங்கி மேலாளர், வங்கியின் இதர உறுப்பினர்களுக்கும் இப்புத்தகங்களைப் பற்றி எடுத்துரைத்து விநியோகம் செய்யுமாறு எங்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவரைப் போன்று ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களை மட்டுமின்றி, விநியோகம் செய்யும் எங்களையும் பாராட்டுகின்ற பல்வேறு மக்களை நாங்கள் அன்றாடம் சந்திக்கின்றோம்.

## கிருஸ்துவப் பள்ளியில்

ஒருமுறை ஒரு கட்டிடத்தின் பக்கவாட்டுக் கதவின் வழியாக உள்ளே நுழைந்தபோது, அஃது ஒரு பள்ளி என்பதை உணர்ந்தோம். எங்களைக் கண்ட பள்ளி மாணவர்கள் மகிழ்ச்சியடைய, நாங்கள் அப்பள்ளியின் துணை முதல்வருடைய அலுவலகத்தினுள் நுழைந்தோம். பள்ளி அலுவலர்கள் பலரும் அங்கிருக்க, அவரைத் தொந்தரவு செய்துவிட்டதாக எண்ணி முதலில் மன்னிப்பு கோரினோம். அவரோ "தொந்தரவு ஏதும் இல்லை" என்று இன்முகத்துடன் உரைத்து, எங்களுடைய



மட்டக்களப்பில் நிகழ்ந்த கிருஷ்ண ஜென்மாஷ்டமி நிகழ்ச்சியில் குழந்தைகளுடன் கட்டுரை ஆசிரியர்

புத்தகங்களில் ஆர்வத்தைக் காட்டினார். பள்ளியின் நூலகத்திற்காக அனைத்து புத்தகங்களையும் வாங்க அவர் முடிவு செய்தார். மேலும், பெரும்பாலான ஆசிரியர்கள் அன்று இல்லாததால் எங்களை அடுத்த நாளும் வரும்படி வேண்டினார்.

மறுநாள் நாங்கள் அங்கு சென்றபோது, எங்களுடைய உரையைக் கேட்க சுமார் நூறு மாணவர்கள் காத்திருந்தனர். சிறு உரை நிகழ்த்திய பின்னர், மாணவர்கள் அனைவருக்கும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தினைக் கற்றுக் கொடுத்தோம். அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் உச்சரித்தனர். இருப்பினும், "காலையில் ஒழுங்காகச் சாப்பிடவில்லையா? சப்தமாகச் சொல்லுங்கள்," என்று நாங்கள் கோரிக்கை வைக்க, மாணவர்கள் அனைவரும் தங்களது குற்றமற்ற இதயத்துடன் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை அடி வயிற்றிலிருந்து பலமாக உச்சரித்தபோது நாங்கள் பெற்ற ஆனந்தத்தினை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. நிகழ்ச்சியின் இறுதியில், சில கேள்விகளைக் கேட்ட ஸ்ரீ தாமோதர தாஸ், பதில் கூறிய மாணவர்களுக்கு *பகவத் தரிசனம்* பத்திரிகையை அன்பளிப்பாக வழங்கினார்.

பின்னர் அனைத்து ஆசிரியர் களையும் தனது அலுவலகத்திற்கு அழைத்த துணை முதல்வர், புத்தகங் களைப் பார்வையிடும்படி கூறினார். கையில் பணம் இல்லாத ஆசிரியர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்டார். மறுநாள் மூன்றாவது முறையாக பள்ளிக்குச் சென்ற போது, பிரசாத கேக் தயார் செய்து, அதனை வாழையிலையில் வைத்து அனைத்து ஆசிரியர்களுக்கும் விநியோகித்தோம். கிருஷ்ண பிரசாதத்தினை வாழ்வில் முதல்முறையாகப் பெற்று, மிகுந்த மகிழ்ச்சியில் உறைந்தனர். மேலும், நாங்கள் அந்நகரத்திற்கு எப்போது வந்தாலும் அப்பள்ளிக்கு நிச்சயம் வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். இதில் ஆச்சரியமான



இச்சம் தீவிலுள்ள பள்ளியின் முதல்வர் மற்றும் மாணவ மாணவியருடன் இஸ்கான் பக்தர்கள்

விஷயம் என்னவெனில், அப்பள்ளி கிருஸ்துவ தேவாலயத்தின் தமிழ் வித்யாலயம் ஆகும். அப்பள்ளியின் பெயர்ப் பலகையினை நாங்கள் முதல் நாளே கண்டிருந்தால், ஒருவேளை அதனுள் நுழையாமல் சென்றிருக்கலாம். குரு மற்றும் கௌராங்கரின் கருணையால் நாங்கள் முதல் நாளன்று பக்கவாட்டு நுழைவாயில் வழியாகச் சென்றிருந்தோம்.

### மட்டக்களப்பிற்கு அருகில்

சில நாள்களுக்கு முன்பு, மட்டக்களப்பிற்கு அருகில் இச்சம் தீவு என்னும் ஊரிலுள்ள ஒரு பள்ளிக்கு விஜயம் செய்தோம். அந்த நிகழ்ச்சியும் மிகவும் ஆனந்தமாக இருந்தது. கீர்த்தனத்தில் எங்களுடன் இணைந்து பள்ளி முதல்வரும் நடனமாட, பல மாணவர்கள் தங்களின் மேஜையின் மீது ஏறி நடனமாடினர். அதனை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

இக்கால நாகரிக குழந்தைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட இக்குழந்தைகளிடம், வீடியோ கேம்ஸ் கிடையாது, அலங்கார உடை கிடையாது, கையில் பணமும் கிடையாது. ஆனால் நகர குழந்தைகளைவிட இவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். எளிய மனம் கொண்ட இவர்களுக்கு, நாங்கள் கிருஷ்ண உணர்வினை வழங்கினால், அவர்கள் வெகு எளிதாக ஏற்றுக் கொள்கின்றனர்.

பள்ளி முதல்வர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அனைத்து புத்தகங்களையும் பள்ளி நூலகத்திற்கு வாங்கிக் கொண்டார். மற்ற ஆசிரியர்கள் பகவத் கீதையினை தங்களுக்காக எடுத்துக் கொண்டனர். ஓர் ஆசிரியை, தனது உறவினர் ஒருவர் துபாயில் பக்தராக இருப்பதாகவும், உணவில் வெங்காயம், பூண்டுகூட சேர்க்காமல் தூய வாழ்வு வாழ்வதாகவும் தனது சக ஆசிரியர்களிடம் எடுத்துக் கூறி, இஸ்கான் இயக்கம் எவ்வாறு பக்குவமான வாழ்வினை ஊக்குவிக்கின்றது என்று பெருமையுடன் கூறினார்.

இலங்கையில் கிருஷ்ண உணர்வினைப் பிரச்சாரம் செய்வதற்கு மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. மக்கள்

எளிய மனதுடனும் பக்தியுடனும் உள்ளனர். குறிப்பாக, நீண்ட கால யுத்தம் மற்றும் சுனாமிக்குப் பின்னர், "வாழ்வின் பொருள் என்ன?" என்று அறிவதில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சங்கீர்த்தன இயக்கத்தினை இலங்கையில் பரப்பிட உலகளாவிய பக்தர்களின் ஆசிகளை வேண்டுகிறோம்.

*வாசுதேவ தத்த தாஸ் அவர்கள், ஐரோப்பாவின் ஸ்லோவீனியா நாட்டில் பிறந்தவர். பல வருடங்களாக ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் புத்தக விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இவர், தற்போது இலங்கையின் திருகோணமலையில் தங்கி கிருஷ்ண உணர்வை தமிழில் பிரச்சாரம் செய்து வருகிறார்.*



*கள்ளம் கபடமற்ற மனதுடன் மேஜை மீது ஏறி ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஆனந்தத்தில் பாடி ஆடிய மாணவர்கள்*

# சிப்பிவாடா கோவில்,

## தற்போது இஸ்கானிற்குச் சொந்தம்

டில்லியில், ஒழுங்கற்ற முறையில் கட்டப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான கட்டிடங்களைக் கொண்ட முக்கியமான மார்க்கெட் பகுதியின் ஒரு சிறிய சந்தின் கடைசியில் உள்ள பழங்காலத்தின் அரண்மனையைப் போன்ற சிப்பிவாடா கட்டிடம் சாதாரண மனிதர்களின் கண்களில் நிச்சயம் தென்படப் போவதில்லை. ஆனால் ஸ்ரீல பிரபுபாதரைப் பின்பற்றுவோருக்கு அக்கட்டிடம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஸ்ரீல பிரபுபாதர் சைதன்ய மஹாபிரபுவின் செய்தியை உலகெங்கிலும் கொண்டு செல்வதற்கு முன்பாக, அவரது எழுத்துப் பணியினை இந்த சிப்பிவாடாவின் இராதா கிருஷ்ணர் கோவிலில்தான் தொடங்கினார்.

ஸ்ரீல பிரபுபாதர் உலகெங்கிலும் இஸ்கானை ஸ்தாபனம் செய்த பின்னர், இக்கோவிலுக்கு தனது சீடர்களுடன் பலமுறை விஜயம் செய்துள்ளார். இக்கோவிலை இஸ்கான் வசம் பெறுவதற்கு ஸ்ரீல பிரபுபாதர் அப்போது முயற்சி செய்தபோதிலும், அப்போதைய அறங்காவலர்கள் அதற்குத் தயாராக இல்லை. ஆனால் சுமார் 40 வருடங்கள் கழித்து, இஸ்கானின் மேல்மட்ட நிர்வாகக் குழுவைச் சேர்ந்த தவத்திரு. கோபால கிருஷ்ண கோஸ்வாமி மற்றும் திரு. ராகவ பண்டித் தாஸ் தலைமையிலான குழுவினரின் தொடர் முயற்சியால், தற்போது சிப்பிவாடா கோவில் சட்டப்பூர்வமாக இஸ்கானிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜைக்கு நான்கு நாள்களுக்கு முன்பு பெறப்பட்ட இக்கோயில் ஸ்ரீல பிரபுபாதருக்கு ஒரு சிறந்த அன்பளிப்பாக அமைந்தது.



*சிப்பிவாடாவில் ஸ்ரீல பிரபுபாதர் தங்கியிருந்த அறையின் முற்றம்*



சிப்பிவாடாவில் ஸ்ரீல பிரபுபாதர் தங்கியிருந்த அறை. அறையின் நடுவிலுள்ள கூம்பு, அதற்கு நேர் கீழாக இராதா கிருஷ்ண விக்ரஹங்கள் இருப்பதைக் காட்டுகிறது.

"பிரபுபாதர் தனது எழுத்துப் பணியை பெரும்பாலும் விருந்தாவனத்தின் இராதா தாமோதரர் கோவிலில் செய்தார். இருப்பினும், இந்த சிப்பிவாடா கோவிலில்தான் அவர் அப்பணியை, குறிப்பாக ஸ்ரீமத் பாகவதப் பணியை தொடங்கினார்," என்று ஸ்ரீல பிரபுபாதரின் ஆரம்ப கால சீடரான திரு பிரம்மானந்த தாஸ் கூறினார்.

இக்கோவில், பிரபலமான செங்கோட்டைக்கு அருகில் அச்சு இயந்திர சந்தைக்கு மத்தியில் அமைந்துள்ளது. ஸ்ரீல பிரபுபாதர் தனது புத்தகங்களை பிரசுரிப்பதற்கு உகந்த இடமாக இதனைத் தேர்வு செய்திருக்கலாம். அவர் அங்கு தங்கியிருந்தபோது, அவரே தனிப்பட்ட முறையில் இங்குள்ள பழங்கால இராதா கிருஷ்ண விக்ரஹத்தை வழிபடுவதுண்டு. அவர் தனது பெரும்பாலான நேரத்தை சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் கழித்தார். ஸ்ரீல பிரபுபாதர் சிப்பிவாடாவில் தங்கியிருந்தபோது, Back to Godhead (பகவத் தரிசனம்) பத்திரிகையை அச்சிடுவதற்காக பெருமுயற்சி செய்து, 12 பிரதிகளை அச்சிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"சுவாமிஜி (ஸ்ரீல பிரபுபாதர்) தனது டைப்ரைட்டரின் முன்பு அமர்ந்து மணிக்கணக்கில் புத்தகப் பணியில் ஈடுபடுவார், சில நேரங்களில் 11 அல்லது 12 மணி நேரம்கூட இடைவிடாமல் டைப் செய்வார். இரவில் நாங்கள் அவருக்கு சற்று உணவு கொடுத்தால், அவர் அதனைப் பணிவுடன் ஏற்றுக் கொள்வார்," என்று அக்கோவிலின் அறங்காவலர்களில் ஒருவரான திரு சர்மா அவர்கள் தெரிவித்தார்.

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(அக்டோபர் 1, 2011 முதல் நவம்பர் 15, 2011 வரை)**

### அக்டோபர்

6, வியாழன், ஸ்ரீ விஜய தசமி, பகவான் ஸ்ரீ இராமர் போரில் வெற்றி கண்ட திருநாள்,
ஸ்ரீபாத மத்வாசாரியர் தோன்றிய நாள்

8, சனி, பஸங்குச ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:03–10:03
ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீல ரகுநாத பட்ட கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீல கிருஷ்ணதாஸ கவிராஜ் கோஸ்வாமி மறைவு நாள்

10, திங்கள், மூன்றாம் சாதுர்மாதத்தின் கடைசி நாள்

11, செவ்வாய், ஸ்ரீ முராரி குப்தர் மறைவு நாள்
நான்காம் சாதுர்மாத விரதம் ஆரம்பம் (ஒரு மாதத்திற்கு உளுந்து சாப்பிடக் கூடாது)
கார்த்திக் (தாமோதர) மாதத்தின் முதல் நாள்

17, திங்கள், ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூரர் தோன்றிய நாள்

20, வியாழன், பஹுலாஷ்டமி, இராதா குண்டம் தோன்றிய நாள்

23, ஞாயிறு, இராம ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:05–10:01

26, புதன், தீபாவளி

27, வியாழன், கோ பூஜை, கோவர்தன பூஜை, ஸ்ரீ ரஸிகானந்தர் தோன்றிய நாள்

30, ஞாயிறு, ஸ்ரீல பிரபுபாதர் மறைவு நாள் (மதியம் வரை விரதம்)

### நவம்பர்

3, வியாழன், கோபாஷ்டமி, ஸ்ரீநிவாஸ ஆச்சாரியர் மறைவு நாள்

6, ஞாயிறு, உத்தன ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:08–10:01
ஸ்ரீல கௌர கிஷோர் தாஸ பாபாஜி மறைவு நாள்,
பீஷ்ம பஞ்சகத்தின் முதல் நாள்

9, புதன், நான்காவது சாதுர்மாதத்தின் கடைசி நாள்

10, வியாழன், பீஷ்ம பஞ்சகத்தின் கடைசி நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகந்நாதர் கோவில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472
மின்னஞ்சல்: iskconchennai@gmail.com
www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net
www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001.
தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.



# பகவத் தரிசனம்

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!





அரசியல், சினிமா, விளையாட்டு என்று எத்தனை நாள்கள் படித்துக் கொண்டிருப்பீர்? முறையான குரு சீடப் பரம்பரையில் பெறப்பட்ட ஆன்மீகச் செய்திகள் தங்கள் வீட்டின் கதவுகளைத் தட்ட வேண்டாமா? பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக மாறுங்கள்.

* உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு
* ஆழ்ந்த தத்துவக் கட்டுரைகள்
* ஆன்மீக ஆனந்தம்
* நாட்டின் நிகழ்வுகளுக்கான ஆன்மீகப் பார்வை
* கண்களைக் கவரும் அழகிய படங்கள்
* இன்றைய உலகத்திற்கு உகந்த ஆன்மீக வழிகாட்டி
* எளிய தமிழில்...




## தங்கள் சந்தாவை புதுப்பியுங்கள்

தங்களது முகவரியின் வலதுபுறத்தில் சந்தா முடிவுறும் மாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை கவனித்து தங்கள் சந்தா முடிவுறுவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

---

**பகவத் தரிசனம்,**

**இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை – 600011.**

தொலைபேசி: (044) 25514553, 98948 14553. மின்னஞ்சல்: tamilbtg@gmail.com

☐ ஆம், என்னை பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக இணைத்துக் கொள்ளுங்கள்

பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

☐ ஒரு வருடம், ரூ 160

☐ இரண்டு வருடம், ரூ 300

☐ ஐந்து வருடம், ரூ 700

பின்கோடு: ____________ தொலைபேசி எண்கள்: ____________

மின்னஞ்சல்: ____________

குறிப்பு: வரைவோலைகளும் (DD) At par காசோலைகளும் (cheque) "Bhaktivedanta Book Trust" என்ற பெயரில், சென்னையில் செலுத்தப்படக்கூடியதாக இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.




# தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

**இராஜபாளையம்**
613, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

**இராமநாதபுரம்**
282, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

**தூத்துக்குடி**
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553

**கம்பம்**
53, கூடலூர் ரோடு, காந்தி சிலை அருகில்.
போன்: 04554 274553

**அருப்புக்கோட்டை**
102, 103 திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை.
போன்: 04566 224553

**தென்காசி**
244/7B, ரயில்வே பீடர் ரோடு,
தென்காசி.

**சேலம்**
62-66, பஜார் ரோடு, பழைய சேலம் கஃபே,
கோட்டை, மாரியம்மன் கோயில் அருகில், சேலம்.
போன்: 0427 2251553